Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, OCTOBER 11, 2022

செவ்வாய்க்கிழமை ஒக்டோபர் 11, 2022 | ஒளி: 08 கதிர்: 118 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

ஜனவரி முதல் செப்டெம்பர் வரை



## 700,733 கடவுச்சீட்டுகள் விநியோகம்

இந்த வருடத்தின் ஜனவரி முதல் செப்டெம்பர் வரை 700,733 கடவுச்சீட்டுகளை விநியோகித்துள்ளதாகவும், இதில் 409,919 ஆண்களுக்கும், 290,814 பெண்களுக்கும் கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் பியுமி பண்டார தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

பிரியமாலி விவகாரம்:



## தயாசிறி எம்.பியும் சீ.ஐ.டி சென்றார்

பாரிய பண மோசடி குறித்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலி என்ற பெண்ணுக்கு, பணம் வழங்கியதாக சமூக வலைத்தளங்களில் பரவி வரும் பெயர் பட்டியலில் தனது பெயர் இடம்பெற்றுள்ளமை குறித்து, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான தயாசிறி ஜயசேகர, குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் (சீ.ஐ.டி) நேற்று (10) முறைப்பாடு பதிவு செய்தார்.

தொடர்ச்சி P2

மோசடி விவகாரத்தில் கைதான

## பிரியமாலியிடம் இருந்து அலைபேசி கண்டுபிடிப்பு

பாரிய பண மோசடி குற்றச்சாட்டு குறித்து கைதுசெய்யப்பட்டு, வெலிக்கடை சிறைச்சாலையின் மகளிர் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலியிடம் இருந்து, நேற்று (10) காலை அலைபேசியொன்று கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் (புனர்வாழ்வு மற்றும் கட்டுப்பாடு) சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



நாட்டைக் கட்டியெழுப்ப

# நிரந்தர தேசிய கொள்கை அவசியம்

நாட்டைக் கட்டியெழுப்ப நிரந்தரமான தேசிய கொள்கை ஒன்றே அவசியம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இதற்காக கட்சி பேதமின்றி, ஒரே தேசிய கொள்கையின் ஊடாக செயற்பட்டு, நாட்டைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயற்பட அனைவரும் முன்வர வேண்டும் என்றும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

அபிவிருத்தியடைந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்ப, நல்ல பொருளாதாரக் கொள்கையும் அரசியல் ஸ்திரத்தன்மையும் இருக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, 'தேசிய சபை'யை ஒரு தளமாகக் கொண்டு, தேசிய கொள்கைக் கட்டமைப்புக் குறித்து கலந்துரையாட ஒன்றாக இணைவோம் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மஹிந்த நாட்டிலிருந்து வெளியேற வேண்டும்

பா.நிரோஸ்



கடந்த காலங்களில் பங்கருக்குள் ஒளிந்து கொண்டிருந்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தற்போது வெளியில் வந்து, நாட்டைக் காப்பாற்ற அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென கூறுகிறார். நாட்டை உண்மையில் காப்பாற்ற வேண்டுமென்றால்,

தொடர்ச்சி P2

## திரவ மருந்து உற்பத்தி தொழிற்சாலை திறக்கப்பட்டது



இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட முதலாவது கிருமித் தொற்று நீக்கிய, திரவ மருந்து உற்பத்தி தொழிற்சாலையை நேற்று (10) கட்டுநாயக்க முதலீட்டு வலயத்தில் திறந்துவைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தொழிற்சாலை நடவடிக்கைகளை பார்வையிட்டபோது...

## பாட்டலியின் பயணத்தடைக்கு தற்காலிக தடையுத்தரவு



ராஜகிரியவில் இடம்பெற்ற வாகன விபத்து குறித்து, பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், அவருக்கு விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பயணத்தடை உத்தரவுக்கு 2023ஆம் ஆண்டு மார்ச் 17ஆம் திகதிவரை தற்காலிகத் தடையுத்தரவு பிறப்பித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த, நேற்று (10) கட்டளையிட்டார்.

தொடர்ச்சி P2

## மொட்டுடன் ரணில் இணைந்துவிட்டார்


பா.நிரோஸ்

களுத்துறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உரையை வைத்துப் பார்க்கும் போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் உறுப்புரிமையை பெற்றுக்கொண்டதாகத் தெரிவதாக அக்கட்சியின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

முறைமை மாற்றத்தை (சிஸ்டம் சேஞ்ச்) கோரி நாட்டில் சுனாமி ஒன்று ஏற்பட்டது. இதனால் 8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகியதோடு, நாட்டைவிட்டும் வெளியேறிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

நாட்டு மக்கள் முறைமை மாற்றத்தைக் கோரி இருந்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

தொடர்ச்சி P2



காபன் குறைப்பு ஒப்பந்தத்தில்

## ஜப்பானும் இலங்கையும் கைச்சாத்திட்டன

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் காபன் குறைப்பு கூட்டுப் பொறிமுறையை நடைமுறைப்படுத்தும் ஒத்துழைப்பு ஒப்பந்தம் நேற்று (10) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் கைச்சாத்திடப்பட்டது. சுற்றாடல் அமைச்சின் செயலாளர் டொக்டர் அனில் ஜாசிங்க மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிதேகி ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். அதனை தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த ஜப்பான் தூதுவர் உள்ளிட்ட குழுவினர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2



## ஜோன்ஸ்டனுக்கு அதி குற்றப்பத்திரம் பகிர்வு

### நவம்பர் 1இல் சாட்சிய விசாரணை



ஊழல் வழக்கில் பிரதிவாதிகளாகப் பெயரிப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவருக்கு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லே முன்னிலையில், நேற்றையதினம் (10) அதி குற்றப்பத்திரம் பகிரப்பட்டது.

தொடர்ச்சி P2

## காலிமுகத்திடல் போராட்டம்: 4 பேர் பிணையில் விடுவிப்பு

### பொலிஸாரின் கோரிக்கை நிராகரிப்பு

காலி முகத்திடலில் ஞாயிற்றுக்கிழமை (09) போராட்டத்தில் ஈடுபட்ட போது கைது செய்யப்பட்ட நால்வரை தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்குமாறு, கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, நேற்று (10) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

கடன் மறுசீரமைப்பில்

## கட்டமைப்பு சீர்திருத்த தீர்மானங்கள் அவசியம்

THE WORLD BANK

நீண்டகால கடன் நெருக்கடியைத் தவிர்ப்பதற்கும், தற்போதைய பொருளாதார சிக்கல்களுக்கான மூல காரணங்களை நிவர்த்தி செய்வதற்கும் வலுவானதும், நம்பகமானதுமான நிதி மற்றும் கட்டமைப்பு சீர்திருத்த வேலைத்திட்டம் அவசியமானது. நெருக்கடியை சமாளிக்க அரசியல் தலைமை, இலங்கை பிரஜைகளின் உறுதியான கட்டமைப்பு சீர்திருத்த தீர்மானம் தேவை என்றும் உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் குறுகிய காலத்தில், சமூக உதவிக்கான நிதியை அதிகரிப்பது முன்னுரிமையாக இருக்க வேண்டும். அத்துடன் பணப் பரிமாற்றங்களின் போது, பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு அவை சென்றடையக்கூடிய விதத்தில் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்

தொடர்ச்சி P2



## மைத்திரியின் மனு இன்று பரிசீலனை

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில், தனக்கு எதிரான நீதவான் விசாரணை மற்றும் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டதை சவாலுக்கு உட்படுத்தி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்த ரிட் மனுவின் பரிசீலனையை மேன்முறையீட்டு நீதிமன்றம், இன்றைய தினத்துக்கு (11) ஒத்திவைத்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல

தொடர்ச்சி P2

புதிய அரசியலமைப்பு

## சர்வஜன வாக்கெடுப்பு வேண்டும்



பா.நிரோஸ்

புதிய அரசியலமைப்பை கொண்டுவர வேண்டுமென தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி, இதற்கான சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

மொட்டுக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று (10) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், 1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நாட்டின் தற்போதைய அரசியலமைப்பு, 20 முறை திருத்தப்பட்டுள்ளது. கடந்த 10 வருடங்களில் மாத்திரம் 4, 5 தடவைகள் அரசியலமைப்பில்

தொடர்ச்சி P2

## சீனாவின் நிதியுதவியில் கொழும்பில் வீடுத்திட்டம்



பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் வசிக்கும் குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அதிகாரசபைக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## தயாசிறி எம்.பியும்...

சமூக ஊடகங்கள் ஊடாக தமது பெயர்களை உரிய பெயர் பட்டியலில் சேர்த்தவர்கள் யார் என்பது குறித்து விசாரணை நடத்துமாறு கோரியே அவர் முறைப்பாடு அளித்துள்ளார்.

இதேவேளை, பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் எம்.பியுமான உதய கம்மன்பில, மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டு தொடர்பில் சீ.ஐ.டியில் நேற்று முன்தினம் (09) முறைப்பாடு செய்திருந்தார்.

அந்தப் பட்டியலில் பெயரிடப்பட்டுள்ள எம்.பிக்களான தயாசிறி ஜயசேகர, சமிந்த விஜேசிறி, ஹேஷா விதானகே மற்றும் தான் ஆகிய நால்வருமே கடந்த காலங்களில் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்தவர்கள் என்றும் கம்மன்பில சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலக வர்த்தக மையத்தின் 34ஆவது மாடியில் அலுவலகம் நடத்தி, கோடிக்கணக்கான ரூபாயை முதலீடுகளாகப் பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டு தொடர்பில், சீ.ஐ.டியினரால் கைதுசெய்யப்பட்ட திலினி பிரியமாலி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# நிரந்தர தேசியக் கொள்கை அவசியம்

இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட முதலாவது கிருமித் தொற்று நீக்கிய, திரவ மருந்து உற்பத்தி தொழிற்சாலையை நேற்று (10) கட்டுநாயக்க முதலீட்டு வலயத்தில் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

நமது பொருளாதாரம் மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும். நமக்குத் தேவையான அன்னியச் செலாவணியை நாம் ஈட்ட வேண்டும். அந்நிய செலாவணி பற்றாக்குறையுடனோ வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறையுடனோ இருக்க முடியாது. வரவுசெலவுத் திட்டத்தில் மேலதிக நிதியை வைத்திருப்பதே நமது நோக்கமாக இருக்க வேண்டும். அதற்கு நாம் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யும் பொருட்கள், பயிரிடும் பயிர், வழங்கும் சேவைகளை அதிகரிக்க வேண்டும். மிகவும் போட்டித் தன்மை கொண்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரம் ஒன்றே நமக்குத் தேவை. இன்று மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொண்டுள்ளனர். தொழில்களை இழந்துள்ளனர். சிலர் ஒரு வேளை உணவின்றி பசியால் வாடுகிறார்கள். இதற்கு நாம் நீண்டகால தீர்வு காண வேண்டும். நாம் அனைவரும் ஒரே தேசியக் கொள்கையில் இருந்து செயற்பட வேண்டும். அந்த தேசிய கொள்கையில் நாம் முன்னோக்கிச் சென்றால், நாம் ஒருபோதும் தோல்வியடைய மாட்டோம். நாம் அரசாங்கத்துக்கு அரசாங்கம் கொள்கைகளை மாற்றினோம். அமைச்சர்கள் மாறும் போதும் கொள்கைகள் மாற்றப்பட்டன. இவ்வாறு செயற்பட்டு நாம் எவ்வாறு முன்னேற முடியும்? எமக்கு ஒரு நல்ல பொருளாதார கட்டமைப்பு இருக்க வேண்டும். ஒரு நல்ல சமூகக் கட்டமைப்பும் அரசியல் கட்டமைப்பும் இருக்க வேண்டும். நமது பொருளாதாரக் கட்டமைப்பானது, அரசியல் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையைப் பொறுத்தே அமைகின்றது. நிலையான அரசியல் முறைமையொன்றை ஏற்படுத்த முடியாவிட்டால் நாட்டு மக்களே பாதிக்கப்படுவார்கள் என்றார்.

## 700,733 கடவுச்சீட்டுகள்...

அதுமட்டுமல்லாது, ஒகஸ்டில் அதிகபட்சமாக 115,286 கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளதெனவும், கடவுச்சீட்டைப் பெறுவதற்காக திணைக்களத்திற்குச் செல்லும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையும் இந்த ஆண்டு கணிசமாக அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் புள்ளிவிபரங்களின்படி, 2021 இல் 392,032 கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கிடையில், இந்த ஆண்டில் 240,000 க்கும் அதிகமான நபர்கள் வெளிநாடுகளில் பணிபுரிய பதிவு செய்துள்ளனர். கடந்த சனிக்கிழமை வரை 241,034 நபர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக பதிவு செய்துள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு மேலதிகமாக ஜப்பான், தென் கொரியா மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் இலங்கையர்களுக்கு அதிக சம்பளத்துடன் கூடிய வேலைகளை வழங்குவதற்கு சர்வதேச பங்காளிகளுடன் அமைச்சு செயற்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார். இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள தரவுகளின்படி, ஒகஸ்ட் மாதத்தில் 325 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த தொழிலாளர்களின் பணம் விகிதம் செப்டெம்பர் மாதத்தில் 359 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

## பிரியமாலியிடம் இருந்து...

சிறைச்சாலை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது குறித்த அலைபேசி கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இது தொடர்பில் வெலிக்கடை சிறைச்சாலை அத்தியட்சகர் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் சிறைச்சாலை ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

உலக வர்த்தக மையத்தின் 34ஆவது மாடியில் அலுவலகம் நடத்தி, கோடிக்கணக்கான ரூபாயை முதலீடுகளாகப் பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டு தொடர்பில், சீ.ஐ.டியினரால் கைதுசெய்யப்பட்ட திலினி பிரியமாலியை, எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவிட்டிருந்தார்.

226 மில்லியன் ரூபாய், 60,000 அமெரிக்க டொலர் மற்றும் 100,000 அவுஸ்திரேலிய டொலர் ஆகியவற்றை அவர் மோசடி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தனது அலுவலகத்தை அண்டிய பல வர்த்தகர்களுடன் நட்பாக பழகி அதிக வருமானம் தருவதாக கூறி வர்த்தகர்களிடம் பணம் பெற்றுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர், நீதிமன்றத்தில் அறிவித்திருந்தனர்.

சந்தேகநபரின் வர்த்தகத்தில் முதலீடு செய்ய பிரபல அரசியல்வாதியும் பணம் வழங்கியுள்ளதாக பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன நீதிமன்றில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மஹிந்த நாட்டிலிருந்து...

மஹிந்த நாட்டை விட்டுத் தப்பியோட வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (10) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார், ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்க அவருக்கு வாக்களித்த 134 பாராளுமன்ற உறுப்பினர்களும் தேர்தலை ரணில் நடத்தக்கூடாது என்ற நிபந்தனை விதித்துள்ளார்கள். எனினும் தேர்தல் நடத்தப்படவில்லை என்றால் மக்களுடன் இணைந்து வீதிக்கு இறங்குவோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களைப் பாதுகாப்பவர் என நாம் கூறியதை மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளார். அதுபோல ராஜபக்ஷர்கள் ரணிலைப் பாதுகாக்கிறார்கள் என்றார்.

காலிமுகத்திடலில் நேற்று முன்தினம் (09) அமைதியான முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. எனினும் இதன்போது பொலிஸார் மோசமாக நாட்டு மக்களுக்கு உள்ள உரிமையை மீறி வருவதாகவும் தெரிவித்தார். சர்வதேசத்தின் உதவிகள் கிடைக்க வேண்டிய தருணத்தில் அரசாங்கம் இப்படி நடந்துக்கொள்வதால் நாட்டு மக்களே அதன் பிரதிபலனை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

## ஜப்பானும் இலங்கையும்...

காபன் குறைப்பு கூட்டுப் பொறிமுறையை (JCM) அமுலாக்குவதன் மூலம் நாட்டிற்கு காபனைக் குறைக்கக்கூடிய முன்னணி தொழில்நுட்பம், புதிய உற்பத்தி முறைகளின் அறிமுகம், அதற்கான நிர்மாணப் பணிகள், இயந்திரங்கள், உபகரணங்கள் உள்ளிட்ட உள்கட்டமைப்புகளை மேம்படுத்தல் ஆகியன கிடைப்பது மற்றுமொரு நன்மையாகும். 2016ஆம் ஆண்டு செப்டெம்பர் 21 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட காலநிலை மாற்றம் தொடர்பான பெரிஸ் உடன்படிக்கைக்கு இலங்கை இணங்கியுள்ளது. ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான சாசனத்திற்கமைய 2021 ஆம் ஆண்டு ஜூலை 30 ஆம் திகதியன்று இலங்கை, தேசிய அளவில் எரிசக்தி, தொழில்துறை, போக்குவரத்து, கழிவு முகாமைத்துவம், விவசாயம், காடு ஆகிய துறைகளில் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கு தனது பங்களிப்பைச் செலுத்துவதற்கு உடன்பட்டுள்ளது.

அதற்கமைய, காபன் குறைப்பு கூட்டுப் பொறிமுறையை (JCM) இலங்கையில் நடைமுறைப்படுத்துவதன் ஊடாக பெரிஸ் உடன்படிக்கையின் கீழ் உறுதியளித்துள்ள இலக்குகளை அடைவதற்கான உலகளாவிய முயற்சிக்கு இலங்கை பங்களிக்கும்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான காபன் குறைப்பு கூட்டுப் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கு வெளிவிவகார அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் அனுமதி பெறப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

மேலும், இப்பொறிமுறையை (JCM) இலங்கையில் அமுல்படுத்தும்போது, இது தொடர்பான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்காக இரு தரப்பினரையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த குழு நிறுவப்படுவதுடன் அதன் இணைத் தலைமை பதவியை இலங்கை மற்றும் ஜப்பான் அரசாங்கங்கள் வகிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாட்டலியின் பயணத்தடைக்கு...

2016 ஆம் ஆண்டு இராஜகிரியவில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க, அவரது சாரதி மற்றும் வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொய்யான சாட்சியங்களை சோடனை செய்தமை, சதி செய்தமை மற்றும் பொய்யான அறிக்கைகளை சமர்ப்பித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ், முன்னாள் அமைச்சர் சம்பிக்க மற்றும் பிரதிவாதிகள் இருவருக்கு எதிராக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றையதினம் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, தனது சேவை பெறுநருக்கு அரசாங்கப் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளதால், தற்போது வழங்கப்பட்டுள்ள பயணத்தடையை அடுத்த நீதிமன்ற அமர்வுவரை இடைநிறுத்துமாறு, பாட்டலி எம்.பி சார்பில் ஆஜரான சட்டத்தரணி சரத் ஜயமான்ன, மன்றில் கோரிநின்றார்.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலிப பீரிஸ் இந்தக் கோரிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்காததையடுத்து, நீதிபதியால் மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த காலப்பகுதியில் சம்பிக்க ரணவக்க எம்.பி வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்குவதாக அறிவித்த நீதிபதி, அவரது கடவுச்சீட்டு நீதிமன்ற காவலில் இருந்தால் அதனை அவரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்.

மேலும், இது குறித்து குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி வழக்கை மார்ச் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதேவேளை, பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிரான கொழும்பு மேல் நீதிமன்ற விசாரணைகளை இடைநிறுத்தி உயர்நீதிமன்றம் ஏற்கெனவே இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மொட்டுடன் ரணில்...

மொட்டுக் கட்சியில் இணைந்துக்கொண்டது மாத்திரமே நாட்டில் நடந்துள்ளதாகவும் தெரிவித்தார். மாகாணசபை தேர்தலுக்கு தேவையான புதிய சட்டங்களை கொண்டுவரப்பபோவதாகவும், பிரதேச சபை, நகர சபையின் உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்தப்போவதாகவும், இதன் தலைவர்களிடமுள்ள அதிகாரங்களை குழுக்களிடம் ஒப்படைக்கப்போவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். தேர்தலைக் காலந்தாழ்த்துவதற்கே ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளதாகவும் அவர் குற்றஞ்சுமத்தினார்.

தேர்தலுக்கான சட்டங்களைக் கொண்டுவருவதாகக் கூறி தேர்தலைக் காலந்தாழ்த்த முடியாது. உரிய நேரத்தில் தேர்தலை நடத்த வேண்டும். இது மக்களுக்குள்ள அடிப்படை எனவும், தேர்தலைக் காலந்தாழ்த்தினால் உயர்நீதிமன்றத்துக்கு செல்வோம் எனவும் தெரிவித்தார்.

## மைத்திரியின் மனு...

ஆகிய இருவர் அடங்கிய அமர்வு முன்னிலையில் மனு நேற்று (11) எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சட்டமா அதிபர் கால அவகாசம் கோரிய காரணத்தால், இன்றையதினம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

இந்த மனுவை நேற்று (10) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவதற்கு நீதியரசர்கள் குழாம், கடந்த 6ஆம் திகதியன்று தீர்மானித்த போதும் சட்டமா அதிபரின் கோரிக்கையால், இன்று (11) பரிசீலிக்கப்படவுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாடு தொடர்பில், ஒக்டோபர் 14ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் செப்டெம்பர் மாதம் 16ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட நோட்டீஸ் உத்தரவை இரத்துச் செய்யுமாறு முன்னாள் ஜனாதிபதி தனது மனுவில் கோரியுள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஏற்கவியலாத சாட்சியங்கள் மற்றும் செவிவழிச் சாட்சியங்களை கருத்திற்கொண்டு நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான் நோட்டீஸ் பிறப்பித்துள்ளதாகவும் தனது விருப்புரிமை அதிகாரத்தை சரியாகப் பயன்படுத்த கோட்டை நீதவான் தவறிவிட்டார் என்றும் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு கோட்டை நீதவான் நோட்டீஸ் பிறப்பிக்கும் முன்னர், தனியார் ஒருவரினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டின் சட்டத் தேவைகளை நீதித்துறைசார் ரீதியில் மதிப்பீடு செய்ய தவறியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## சர்வஜன...

திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போதைய அரசியலமைப்பில் மக்களுக்கு நம்பிக்கையில்லையா என்கிறப் பிரச்சினை இதனூடாக எழுவதாகவும் தெரிவித்தார். நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறை நீக்கப்பட்டது. இதனால் நாட்டில் அராஜக நிலை ஏற்பட்டது எனவும் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் நாட்டின் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கக் கூறியிருப்பதால், புதிய அரசியலமைப்பு கொண்டுவருவதற்கான நேரம் வந்துள்ளது என்றார். இதேவேளை, தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக சர்வஜன வாக்கெடுப்பை ஜனாதிபதி நடத்துவாராக இருந்தால், புதிய அரசியலமைப்பு என இரண்டுக்கும் ஒன்றாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## சீனாவின்...

திறைச்சேரிக்கு சுமையை ஏற்படுத்தாது இந்த வேலைத்திட்டத்துக்கு தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள மாற்றுவழிகளை பின்பற்ற வேண்டுமெனவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்துள்ளார்.

ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள், முதலீட்டு வங்கியின் நிதி உதவியின் கீழ் 5 ஆயிரத்து 500 வீடுகளை நிர்மாணிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதில் 4 ஆயிரத்து 74 தொடர்மாடி வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

## காலிமுகத்திடல் போராட்டம்:...

கடந்த ஏப்ரல் 09ஆம் திகதி முதல் இடம்பெற்ற அரசாங்கத்தக்கு எதிரான போராட்டத்துக்கு பங்களிப்பு செய்து உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் வகையில் போராட்டக்கள உறுப்பினர்கள், காலி முகத்திடலில் நேற்று முன்தினம் (09) நடவடிக்கையை ஏற்பாடு செய்திருந்தனர்.

அதன் போது ஐவர் கைது செய்யப்பட்ட நிலையில், அதில் ஒருவரான 16 வயது மாணவன் விடுவிக்கப்பட்டதுடன், ஏனைய நால்வரும் கோட்டை பொலிஸாரால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, கொழும்பு காலி முகத்திடலில் சட்டத்தரணிகள் மற்றும் தொழிற்சங்கத்தினர் இணைந்து நேற்று (10) பிற்பகல் நடத்த திட்டமிட்டிருந்த எதிர்ப்பு நடவடிக்கைக்கு தடை விதிக்குமாறு கோரி கோட்டை பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கோட்டை நீதவான் நிராகரித்தார்.

அமைதியான முறையில் எதிர்ப்பில் ஈடுபடுவது மீறப்பட முடியாத உரிமையாகும் என சட்டத்தரணிகள் மற்றும் தொழிற்சங்கத்தினரின் உரிமைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகிய சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மன்றில் சுட்டிக்காட்டினார்.

## கட்டமைப்பு சீர்திருத்த...

இலங்கை இதன்போது பணப்பரிமாற்ற திட்டங்களுக்கு நவீன கட்டண முறைகளை பின்பற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. மேலும், நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கு, இலங்கையானது நிதி ரீதியாக நிலையான மற்றும் உள்ளடக்கிய சமூக காப்புறுதி, முதியோர் பராமரிப்பு முறைக்கு மாற வேண்டும். அதேபோல் இலங்கையும் அதன் உற்பத்தி திட்டங்களை வலுப்படுத்த வேண்டும்.

அதிகரித்து வரும் கடன் பாதிப்புகள், பலவீனமான போட்டித்திறன், பல ஆண்டுகளாக அபாயகரமான கடன் வாங்குதல், மோசமான நிதி மற்றும் பணவியல் கொள்கை தேர்வுகள், பலவீனமான நிர்வாகத்துடன், தாங்க முடியாத கடன் மற்றும் கடுமையான கொடுப்பனவு நெருக்கடிக்கு வால்; வழிவகுத்துள்ளதாகவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

## ஜோன்ஸ்டனுக்கு...

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில், சதொச நிறுவனத்தின் ஊழியர்களை அரசியல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தியதன் மூலம் அரசுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூவருக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, லங்கா சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் எராஜ் பெர்னாண்டோ மற்றும் ஜோன்ஸ்டனின் பிரத்தியேக செயலாளர் ராஜ் மொஹிதீன் மொஹமட் சக்கீர் ஆகியோருக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்றையதினம் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அதிகுற்றப்பத்திரம் பகிரப்பட்டதுடன், நவம்பர் 1ஆம் திகதியை சாட்சிய விசாரணைக்கான தினமாக நீதிபதி நிர்ணயித்தார்.

குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கு எதிராகவும் இலஞ்ச சட்டத்தின் 70 ஆவது பிரிவின் கீழ் நான்கு குற்றச்சாட்டுகளை முன்வைத்து இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராக முதலாவது பிரதவாதியான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கடமையாற்றிய போது சதொச ஊழியர்களை சட்டவிரோதமான முறையில் தேர்தல் பணிகளுக்காக ஈடுபடுத்தியதாக ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது.

# மனோவுடன் இணைந்து செயற்படத் தயார்



கடந்த ஆட்சிக் காலத்தில் கைது செய்யப்பட்டிருந்தபோது, தமிழ் கைதிகளுடனேயே சிறைச்சாலையில் தான் இருந்ததாகத் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனுடன் இணைந்து செயற்படத் தயார் எனவும் அறிவித்துள்ளார். ராஜபக்ஷ ஆட்சி வந்தவுடன், அரசியல் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பில் முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரியுடன் 2020ஆம் ஆண்டு முதல் கவனம் செலுத்தி வருகிறேன்.

அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எனினும், 30 வருடங்களுக்குப் பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய ஆலோசனைக் குழுவொன்று கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பில் இதன்போது நாமல் சுட்டிக்காட்டினார்.

இதனூடாக 81 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். எனினும் நாங்கள் 2 வருடங்களுக்குள்ளேயே 81 கைதிகளை விடுதலை செய்திருந்தாலும், நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் (2015 - 2019) 5 வருடங்களில் வெறும் 96 கைதிகளே விடுதலை செய்யப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார்.



# “எனது குழந்தைக்கு அடிபட்டுள்ளது”

**பா.நிரோஸ்**

போராட்டத்தில் உயிரிழந்தவர்களை காலிமுகத்திடலில் நேற்றுமுன்தினம் (09) அமைதியாக நினைவுக்கூர, போராட்டக்காரர்கள் முயன்றனர். எனினும், இதன்போது போராட்டக்காரர்களை அங்கிருந்து அப்புறப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்ததால், காலிமுகத்திடலுக்கு தங்களது பிள்ளைகளுடன் வந்திருந்தவர்களையும் பொலிஸார் பிள்ளைகளுடன் இழுத்துச் சென்றிருந்தனர்.

இச்சம்பவத்தால் பாதிக்கப்பட்ட ஒருவயது குழந்தை, லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் நேற்று (09) அனுமதிக்கப்பட்டுள்ளது.

குழந்தைக்கு எந்தவிதமான பாதிப்புகளும் இல்லை என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிப்பதோடு, சிகிச்சைகள் நிறைவடைந்துள்ளதாகவும் குழந்தை நலமாக இருப்பதால் வீட்டுக்கு அழைத்துச் செல்ல முடியுமென வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், பொலிஸார் இழுத்துச் சென்றதில் குழந்தையின் பின்புறத்தில் அடிபட்டு நீலநிறமாகி இருப்பதாக குழந்தையின் தாய் தெரிவிக்கிறார். இதனால், வைத்தியசாலையில் 24 மணித்தியாலம் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளவும் தீர்மானித்துள்ளார்.

எவ்வாறாயினும், “எனது குழந்தைக்கு ஏற்பட்ட இச்சம்பவம் இலங்கையில் இனி வேறெந்த குழந்தைக்கும் ஏற்படக்கூடாது. எனவே பொலிஸாரின் இந்த மோசமான செயலுக்கு எதிராக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடுவேன்” எனவும் குழந்தையின் தாய் தமிழ்மிரருக்குக் கூறினார்.

## 22ஆவது திருத்தச் சட்டமூலத்தை

# பாலின சமத்துவம், சமூக உள்ளடக்க கண்ணோட்டத்தில் ஆய்வு



அரசியலமைப்புக்கான 22ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம், பாலின சமத்துவம் மற்றும் சமூக உள்ளடக்கக் (GESI) கண்ணோட்டத்தில் கலந்துரையாடலொன்றை அண்மையில் (06) பாராளுமன்றத்தில் நடத்தியது. பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தலைமையில் நடந்த ஒன்றியத்தின் கூட்டத்தில், இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. சட்டமூலத்தின் முக்கிய விடயங்களை சுட்டிக்காட்டும் அதேவேளை, அரசியலமைப்புப் பேரவையில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான எந்தவோர் ஒதுக்கீடும் (ஒதுக்கப்பட்ட அல்லது ஏனைய வகையில்) திருத்தத்தால் வழங்கப்படவில்லை என்றும் பாலின சமத்துவம் மற்றும் சமூக உள்ளடக்கத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஏற்பாடுகள் சட்டமூலத்தில் உள்வாங்கப்படவில்லை என்றும் ஒன்றியத்தின் கருத்தாக இருந்தது.

அதற்கமைய, ஆணைக்குழுக்கள் மற்றும் அரசியலமைப்புப் பேரவை உள்ளிட்ட தீர்மானமெடுக்கும் நிறுவனங்களுக்கு பெண்களை உள்வாங்க அனுமதிக்கும் வகையிலான ஒதுக்கீட்டை அரசியலமைப்பில் சேர்த்து சட்டமூலம் திருத்தப்படவேண்டும் என்பது ஒன்றியத்தின் கருத்தாக இருந்தது.

சபாநாயகர் அல்லது பிரதி சபாநாயகர் பதவிக்கு பெண் பாராளுமன்ற உறுப்பினரை நியமிப்பதற்கும் இங்கு பரிந்துரைக்கப்பட்டது.

பெண்களுக்கான சம உரிமைக்குத் தடங்கலாக உள்ள தனியார் சட்டங்கள் உள்ளிட்ட பழைய சட்டங்களை 16 ஆம் உறுப்புரையின் கீழ் பேணுவதால் ஏற்படும் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் விசேடமாக 12 ஆம் உறுப்புரை அமைவதை உறுதிப்படுத்தும் வகையில் 16 ஆம் உறுப்புரை திருத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இங்கு பரிந்துரைக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களான தலதா அத்துகோரல, ரோஹிணி விஜேரத்ன, ரஜிகா விக்கிரமசிங்க, மஞ்சுளா திஸாநாயக்க மற்றும் தேசிய ஜனநாயக நிறுவனத்தின் (NDI) பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## 5–10 சதவீதமானோர்

# மனநலம் பாதிக்கப்பட்டுள்ளனர்

இலங்கை தற்போது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் சார் சமூக பிரச்சினைகள் காரணமாக, மக்கள் பாரிய மன அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும், நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு மத்தியில் 05 முதல் 15 சதவீதமானோர் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளதாக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் ரூமி ரேபன் தெரிவித்துள்ளார்.

அனைவரினதும் உள நலனை மேம்படுத்துவதே பிராந்தியத்திற்கான முன்னுரிமை விடயம் என்ற தொனிப்பொருளில் இம்முறை சர்வதேச உளநல தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. அதற்கமைய, தேசிய ரீதியில் உளநல மேம்பாட்டிற்கான சில வேலைத்திட்டங்கள் நேற்று (10) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்த நெருக்கடியான கால கட்டத்தில் இலங்கையில் உள்ள பல குடும்ப உறுப்பினர்களின் மனநலம் குறைந்துள்ளதாக ‘சேவ் த சில்ட்ரன்’ நடத்திய விரைவான தேவைகள் மதிப்பீட்டு ஆய்வில் தெரியவந்துள்ளது.

## பொலிஸார் குறித்து

# இளம் ஊடகவியலாளர் சங்கம் முறைப்பாடு

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் உயிரிழந்தவர்களை, காலிமுகத்திடலில் அமைதியான முறையில் நினைவுக்கூர முயன்றவர்களிடம் பொலிஸார் நேற்று (09) மோசமாக நடந்துகொண்ட சம்பவம் தொடர்பில், இலங்கையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம், பொலிஸாருக்கு எதிராக இந்த முறைப்பாட்டை செய்துள்ளது. பிள்ளைகளுடன் காலிமுகத்திடலில் அமைதியான முறையில் போராட்டங்களை முன்னெடுத்திருந்தவர்களிடம் பொலிஸார் கடுமையாக நடந்துகொண்டு, அவர்களது மனித உரிமைகளை மீறியுள்ளதாகவும் அச்சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது. மேலும், இச்சம்பவத்தில் ஈடுபட்ட உயர் அதிகாரிகள் தொடர்பில், தகவல்களை வழங்க வேண்டுமென பொதுமக்களிடம் இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

## 22ஆவது திருத்தம் வேண்டாம்:

# புதிய அரசியலமைப்பை கொண்டுவர வேண்டும்

**பா.நிரோஸ்**



அரசியலமைப்புக்கு போதுமானளவு பிளாஸ்டர்கள் ஒட்டப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன, 22ஆவது திருத்தச் சட்டம் எனக்கூறி பிளாஸ்டர்களை ஒட்டுவதற்குப் பதிலாக, புதிய அரசியலமைப்பைக் கொண்டுவர வேண்டுமெனவும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (10) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், களுத்துறையில் இடம்பெற்ற மொட்டுக் கட்சியின் மாநாட்டைப் பார்த்து சில கட்சித் தலைவர்கள் மண்ணெண்ணெய் பட்ட பாம்புபோல் துள்ளித்துடிக்கிறார்கள். களுத்துறைக் கூட்டத்துக்கு மக்களை பலவந்தமாக நாம் அழைத்துவரவில்லை.

களுத்துறையில் நடைபெற்ற கூட்டம் செயற்கையானது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விமர்சித்துள்ளார். எனினும் மைத்திரி மொட்டுக் கட்சியின் ஊடாகவே பாராளுமன்றத்துக்கு வந்தார் என்பதை நினைவில்கொள்ள வேண்டும். ராஜபக்ஷர்கள் மீதுள்ள பயத்தைப் போக்கிக்கொள்ளுங்கள்.

தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். அதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம். இதேவேளை, அரசியலமைப்பு திருத்தங்கள் ஊடாக அதிளவான பிளாஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. 22, 23 என ஒருநாள் எண்ணிக்கையில் கொள்ள முடியாதளவு திருத்தங்கள் கொண்டுவரப்படலாம் எனவும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வரும்போது, புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரப்போவதாகக் கூறினார். எனவே, அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளாது, புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதற்கான நேரம் வந்துவிட்டதாகவும் தெரிவித்தார்.

# ரணிலை திட்டிய மஹிந்தர்கள் இன்று ரணில் புகழ் பாடுகின்றனர்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ‘பிணை முறி திருடன்’ என நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்திலிருந்தே அழைத்த ராஜபக்ஷர்கள், தற்போது அவருக்குப் புகழ் பாடிவருகின்றனர் எனவும் முடிந்தால் தேர்தலை நடத்தி, மக்களின் முடிவைப் பார்க்குமாறு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திடம் கோருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தெல்தெனிய தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் நேற்று முன்தினம் (8) உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நம் நாட்டை அழித்த, நாட்டை வங்குரோத்தடையச் செய்த, நம் நாட்டை பிச்சைக்கார நாடாக மாற்றிய இந்த ராஜபக்ஷ கும்பல், மீண்டும் ஆட்சியை கைப்பற்ற இன்னொரு சந்தர்ப்பம் வழங்கக் கூடாது எனவும், அவ்வாறு நடந்தால் நாடு மீண்டும் அழிவை நோக்கிச் செல்வதை தடுக்க முடியாது எனவும் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், மக்கள் படும் துன்பங்களை உணர்ந்து, மக்களின் பிரச்சினைகளுக்குப் பதில் சொல்லும் தற்போதுள்ள ஒரே மாற்று அணி ஐக்கிய மக்கள் சக்தி என்பதால் தேர்தலை நடத்தி மக்கள் அபிப்பிராயத்தைப் பார்க்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

கோட்டாபய முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் என மஹிந்த ராஜபக்ஷ முன்னைய கூட்டங்களில் கூறினாலும், கடந்த காலங்களில் இலட்சக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கழுத்தைப் பிடித்து நாட்டை விட்டும் துரத்தினார்கள். முன்னர் ரணிலைத் திட்டிய மஹிந்தர்கள் தற்போது ரணிலை புகழ் பாடுகின்றனர்.

ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு பயந்து புதிய சட்டங்களை கொண்டு வருகின்றது. அந்தச் சட்டங்கள் ஊடாக புனர்வாழ்வுப் பணியகத்தை நிறுவி, அதன் மூலம் போராடிய இளைஞர்களை சிறையில் அடைத்து, அரச மிலேச்சத்தனத்தால் அடக்கி ஒடுக்க முயல்கின்றனர்.

அந்தப் புனர்வாழ்வு பணியக சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். அது அரசியலமைப்புக்கும் மனித உரிமைகளுக்கும் எதிரானது. இவ்வாறான சட்டவிரோத வேலைத்திட்டங்களைக் கொண்டு வந்து நாட்டை அழிக்க இடமளிக்கப்படமாட்டாது எனவும் எதிர்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

> **“அரசாங்கம் மக்களுக்கு பயந்து புதிய சட்டங்களை கொண்டு வருகின்றது. அந்தச் சட்டங்கள் ஊடாக, போராடிய இளைஞர்களை சிறையில் அடைத்து, அரச மிலேச்சத்தனத்தால் அடக்கி ஒடுக்க முயல்கின்றனர். இந்தப் புனர்வாழ்வு பணியக சட்டங்ககளை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். அது அரசியலமைப்புக்கும் மனித உரிமைகளுக்கும் எதிரானது**

அவ்வாறே, பயங்கரவாத தடைச் சட்டம், சட்ட விரோதமாக பயன்படுத்தப்பட்டு மக்களின் ஜனநாயக ரீதியான இயல்பு வாழ்வை அழிக்க பயன்படுத்தப்படுகிறது எனவும், இதற்கான உரிமை அரசுக்கு இல்லை என்றும், இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு அரசாங்கம் பிக்குகளைக் கூட சிறையில் அடைத்துள்ளதாகவும் மக்களின் துயரங்களுக்காகவும் ஜனநாயக உரிமைகளுக்காகவும் போராடிய இளைஞர்களை சிறையில் அடைத்ததன் மூலம், அவர்களின் ஜனநாயக உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தேசிய பேரவையில்

# பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும்



புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட தேசிய பேரவையின் அங்கத்தவர்களில் அதிக பெண் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொடுக்குமாறு கோரிக்கை விடுத்து பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் சபாநாயகருக்குக் கடிதமொன்றை கையளித்துள்ளது.

பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் இந்தக் கடிதத்தை வியாழக்கிழமை (06) கையளித்தார். தேசிய பேரவையை ஸ்தாபிப்பதற்கான பிரேரணைக்கு அமைய இதுவரை உரிய 35 அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் 28 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இதில் உள்ளடப்பட்டுள்ள பெண் உறுப்பினர் பவித்ரா வன்னிஆரச்சி ஆவார். எனவே, தேசிய பேரவையின் ஏனைய அங்கத்தவர்களை பெயர் குறிப்பிடும் போது பெண் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குமாறு பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் இந்தக் கடித்தம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.



ஐ.நாவில் பிரேரணையை நிறைவேற்றினால் மட்டும்போதாது;

# நிரந்தரமான தீர்வு சர்வதேசத்திடம் இருந்து கிடைக்க வேண்டும்

வா. கிருஸ்ணா

ஐ.நாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை நிறைவேற்றினால் மட்டும்போதாது, இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் சர்வதேசத்திடம் இருந்து கிடைக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

உழவர்களை நினைவு கூரும் வகையில் மட்டக்களப்பு, மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட எருவில் பிரதேசத்தில் உழவர் சிலை நேற்றுமுன்தினம் (09) திறந்துவைக்கப்பட்டது.

எருவில் இளைஞர் கழகம், உதயநிலா கலைக்கழகம், கண்ணகி விளையாட்டுக்கழகம் இணைந்து இந்த உழவர் சிலையை கொம்புச்சந்தியில் நிர்மாணித்துள்ளனர். இதன் திறப்பு விழா, கண்ணகி விளையாட்டுக்கழக தலைவரும் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினருமான இ.வேணுராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரன், இரா. சாணக்கியன் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும் மண்முனை தென்னெருவில் பற்று பிரதேசசபை தவிசாளர் ஞா. யோகநாதன் சிறப்பு அதிதியாகவும் கலந்துகொண்டனர். இதன்போது கருத்து தெரிவித்த கருணாகரம் எம்.பி மேலும் கூறியதாவது:

உண்மையில் ஒரு கிராமம் முன்னேற வேண்டுமானால் அந்தக் கிராமத்தில் உள்ள இளைஞர்கள் துடிப்புடன் செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் மட்டும் போதாது; ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். அந்த வகையில், இக்கிராமத்தில் விளையாட்டுக் கழகம், கலைக்கழகம், இளைஞர் கழகம் ஆகிய மூன்றும் இணைந்து, ஒற்றுமையுடன் செயற்படுவது தேசத்துக்கு முன்னுதாரணமாக உள்ளது.

இன்றைய இந்தப் பொருளாதார நிலைக்கு, சுதந்திரத்தின் பின்னர் ஆட்சி பீடம் ஏறிய அனைத்து ஆட்சியாளர்களுமே காரணமாவர். 1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்தை கொண்டு வந்து, எம்மை அடக்கி ஒடுக்கியதால் அஹிம்சை வழிப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாற்றமடைந்தது.

ஆயுதப் போராட்டத்தை அடக்குவதற்காக ஜே.ஆர் ஜெயவர்தனா, "போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்" என்ற அறைகூவலுடன், எமது போராட்டத்தை அடக்குவதற்காக, கூடுதலான நிதியை வாரி இறைத்ததுதான் இன்றைய பொருளாதார நிலைக்கான அடித்தளமாகும்.

உண்மையான அதிகாரப் பரவலாக்கத்துடன் மாகாணசபை இயங்குமாக இருந்தால், தொல்பொருள் திணைக்களத்தின் ஊடாக அறிவிக்கப்படும் எமது காணிகள், எமது புராதன சின்னங்கள் என்பவற்றை பாதுகாக்க முடியும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு தான் உரிமையை பெறுவதற்காக, இராஜதந்திர ரீதியில் சர்வதேசத்தை இன்று அணுகிக் கொண்டிருக்கின்றார்கள். எங்களது கோரிக்கைக்கு இணங்கி தான் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையகத்தின் பிரேரணைக்கு 193 நாடுகளில் 37 அனுசரணை வழங்கி இருக்கின்றார்கள், 20 நாடுகளின் ஆதரவுடன் அந்த பிரேரணை நிறைவேறி இருக்கின்றது. இது நிறைவேறி இருந்தால் மாத்திரம் போதாது, புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு, சர்வதேசத்திடம் இருந்து கிடைக்க வேண்டும்.

சர்வதேசம் எமது பிரச்சினைகளை கவனத்தில் கொள்ள வேண்டுமானால் நாங்கள் பலமாக இருக்க வேண்டும்.



# பிரியாவிடை

வி.ரி சகாதேவராஜா

மட்டக்களப்பு, கல்லடி இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்ல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ், நான்கு வருட கால ஜீவ சேவையை முடித்துக் கொண்டு ஞாயிற்றுக்கிழமை (16) இந்தியா திரும்புகின்றார்.

அவரது அர்ப்பணிப்பான சேவையை பாராட்டி வழியனுப்பும் பிரியாவிடை வைபவம் சனிக்கிழமை (15) கல்லடி, இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, கல்லடி இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்ல புதிய முகாமையாளராக இதுவரை உதவிப் பொது முகாமையாளராக சேவையாற்றிய ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் நியமிக்கப்பட்டிருக்கின்றார் .

அதேவேளை, இந்தியாவில் இருந்து மட்டக்களப்புக்கு வரும் சுவாமி சுரர்ச்சிதானந்தஜி கல்லடி இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்ல உதவி முகாமையாளராக பணிபுரியவுள்ளார்.

# சிறந்த அதிபராக கௌரவம்

எம்.எஸ்.எம் ஹனீபா




சம்மாந்துறை கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஹோலிகுறோஸ் மகா வித்தியாலயத்தின் அதிபர் அருட்சகோதரி எம். சிறியபுஸ்பம், சிறந்த அதிபராக தெரிவு செய்யப்பட்டு பாராட்டப்பட்டுள்ளார்.

வியாழக்கிழமை (06) கல்வி அமைச்சில், கல்வி அமைச்சர் சுசில் பிரேமசந்திர தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

2020, 2021 ஆம் ஆண்டுகளில் கொவிட் -19 பெருந்தொற்று காலகட்டத்தில், சிறந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தியதன் காரணத்தால், அவரது சேவையைப் பாராட்டி, விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

உன்னிச்சை, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்:

# கூட்டத்தைப் புறக்கணித்த ஆளும் தரப்பு எம்.பிக்கள்

பெரும்போகப் பயிர்ச்செய்கை ஆரம்பக் கூட்டம், மண்முனை மேற்கு வவுணதீவில் நேற்று (10) நடைபெற்றது.

உன்னிச்சை, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் தொடர்பில் இதன்போது அதிகளவில் அவதானம் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், இன்றைய குறித்த கூட்டத்தை அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணித்திருந்தமை பெரும் விமர்சனங்களை தோற்றுவித்துள்ளது.

இந்தநிலையில், இதுதொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனும் கடும் விமர்சனங்களை வெளியிட்டுள்ளார்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய

# 91 வர்த்தகர்களிடம் அபராதம்

எம்.எஸ்.எம் ஹனீபா

அம்பாறை மாவட்டத்தில், செப்டெம்பர் மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி, வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 91 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களால் 04 இலட்சத்து 84 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி நேற்று (10) தெரிவித்தார்.

நுகர்வோர் செய்த முறைப்பாட்டை அடுத்து, மாவட்ட செயலாளர் ஜே.எம்.ஏ டக்ளஸின் ஆலோசனைக்கமைய, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம் சாலிய பண்டார தலைமையில், சுற்றி வளைப்புகளை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்டார்கள்.



அம்பாறை,தெஹியத்தக்கண்டி, அக்கரைப்பற்று, பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட 71 சுற்றிவளைப்புகளில், நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட 97 வழக்குகளில் 91 வர்த்தகர்களிடம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதோடு, ஏனைய வர்த்தகர்களுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டு விலையினை விட கூடுதல் விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, காலவதியான பொருட்கள், தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததாகவும் கூறினார்.

ஒதுக்கீட்டு பிரதேசங்களை ஆக்கிரமித்து பயிர்செய்தால்

# அழிக்கப்படும்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

திணைக்களங்களுக்கு சொந்தமான ஒதுக்கீட்டு பிரதேசங்களை ஆக்கிரமித்து, இம்முறை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுமாக இருந்தால், அவற்றை அழிப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது என கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளளார்.

இவ்வாண்டு, இரணைமடுக்குளத்தின் கீழான பெரும்போக செய்கை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் கூறியதாவது:

இந்தப் போகத்தின் போது, 70 சதவீதமான இரசாயனப் பசளைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேநேரம், சேதனப் பசளைகளையும் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.



விவசாய அமைப்புகளை பதிவு செய்கின்ற அதிகாரம், கமநல சேவை திணைக்களத்துக்கே உரித்தானது. அத்துடன் நிதி செலவிடுதல், நிதிகளை கையாளுதல், வைப்பிலிடுதல் போன்றவற்றைக் கண்காணிக்கின்ற பொறுப்பும் கமநல சேவை திணைக்களத்துக்கே உள்ளது.

விவசாய அமைக்களின் நிதி மோசடிகள் தொடர்பில், விவசாயிகளிடமிருந்து ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று இருக்கின்றன. அதற்கமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கடந்த போகத்தில் பல்வேறு சிரமங்கள், இடர்பாடுகள் இருந்தன. அதாவது, சேதன உரங்களை பயன்படுத்தியமையால் உற்பத்தி குறைந்துள்ளதை அவதானிக்க கூடியதாக உள்ளது. இம்முறை திணைக்களங்களுக்கு சொந்தமான ஒதுக்கீட்டு பிரதேசங்களை ஆக்கிரமித்து, பயிர் செய்கை மேற்கொள்ளப்படுமாக இருந்தால் அவற்றை அழிப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளளார்.









# முதியோர் கௌரவிப்பு...

யாழ்ப்பாணம், தனங்கிளப்பு ஶ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில், முதியோர் தின நிகழ்வும் முதியோர் கௌரவிப்பும் நேற்று முன்தினம் (09) நடைபெற்றது.

ஶ்ரீ முருகன் சன சமூக நிலைய தலைவர் தி. விமலதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன், சாவகச்சேரி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஜெயந்தி ஜெயசீலன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நிதர்சன் விநோத்





# 19 இலட்சம் ரூபாய் பெறுமதியான சுறாக்கள்

எம். றொசாந்த்

யாழ்ப்பாணம், பருத்தித்துறை மீனவர்களால் 14 சுறா மீன்கள் ஞாயிற்றுக்கிழமை (09) பிடிக்கப்பட்டுள்ளன. குறித்த 14 சுறா மீன்களும் சுமார் இரண்டாயிரம் கிலோ கிராமுக்கும் அதிகம் எனவும், அவற்றின் பெறுமதி சுமார் 19 இலட்சத்துக்கு அதிகம் எனவும் அவை கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது.

# போதை ஊசி மருந்துகளுடன் இருவர் கைது

செந்தூரன் பிரதீபன்

யாழ்ப்பாணம், கோப்பாய் பகுதியில் போதை ஊசி மருந்துகளுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் கோப்பாய், அரசடி பகுதிகளைச் சேர்ந்த 28 வயதுடைய நபர்கள் எனத் தெரியவருகிறது. பொலிஸ் பரிசோதகர் மேனனுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய, சந்தேக நபர்கள் கோப்பாய் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து 10 சிறின்ஷ், இரண்டு கிராம் ஐஸ் போதைப்பொருள், ஒன்றரை கிராம் ஹெரோயின் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு

# புதிய மூன்று மாடிக் கட்டடம்

நிதர்சன் விநோத்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கான விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்தில் நேற்று (10), வடக்கு மாகாண பிரதம செயலர் எஸ்.எம் சமன்பந்துலசேனவால் திறந்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகர் வைத்திய கலாநிதி சி. குமரவேள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.







### மக்களின் நிதி உதவியில் அமைக்கப்பட்ட

## நுழைவுப்பாதை திறந்து வைக்கப்பட்டது

■ மொஹொமட் ஆஸிக்

தெல்தோட்டை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மெடிஹேன கிராமத்தின் நுழைவுப் பாதை, பிரதேச மக்களின் நிதி உதவியுடன் செப்பனிடப்பட்டு, திறந்துவைக்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் (09) நடைபெற்றது.

இவ் விழாவில் பிரதம அதிதியாக அநுராதபுரம் மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் றஹ்மான் கலந்துகொண்டதுடன், விஷேட அதிதியாக குருநாகல் போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் ஷாபி சிஹாப்தீன் கலந்துகொண்டார்.

மெடிஹேன கிராமத்தின் நீண்ட கால குறைப்பாடாக காணப்பட்ட இந்த நுழைவுப்பாதை, கிராம மக்களின் நிதி பங்களிப்பில் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



### நுவரெலியா நகருக்குள் நுழைந்த

## வாகனங்கள் சோதனை

■ கேதீஸ்

நுவரெலியா நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்கள் அனைத்தும் நேற்றைய தினம் (10) சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

ஏற்கெனவே, வாகன புகைப் பரிசோதனையை மேற்கொண்டனவா என்பதைச் பரிசோதித்து, அந்த வாகனங்களில் புகை வெளியேற்றம் எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டறிவதற்காக, நுவரெலியா பொலிஸார், மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் நுவரெலியா மோட்டார் திணைக்களம் இணைந்து வாகனங்களை பரிசோதிக்கும் நடவடிக்கையை முன்னெடுத்தன.

இதன்போது, வாகனங்களின் புகை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சாரதிகளுக்கு விழிப்புணர்வூட்டல் செய்யப்பட்டதுடன், வாகனங்களில் காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு உரிய அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

இதில் நுவரெலியா பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியாராச்சி மற்றும் பொலிஸ் அதிகாரிகள் குழு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, நுவரெலியா மோட்டார் பரிசோதகர் ஆகியோர் இணைந்திருந்தனர்.

### கனவரல்ல தொழிலாளியின் மரணத்துக்கு

# நிர்வாகமே பொறுப்பு

**அரசியல் தலைமைகள் கண்டனம்; பூதவுடல் அடக்கம் செய்யப்படாது என ஆவேசம்**

பசறை, கனவரெல்ல தோட்டத்தில் தோட்ட நிர்வாகத்தின் கவனக்குறைவாலும் அழுத்தத்தாலும் தோட்டத் தொழிலாளி மரணமடைந்தமை குறித்து, இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் வன்மையாக கண்டித்துள்ளார்.

உயிரிழந்த தொழிலாளியின் மரணத்துக்கு நியாயமான தீர்வு எட்டப்படும் வரை, பூதவுடல் அடக்கம் செய்யப்படமாட்டாது என செந்தில் தொண்டமான் பெருந்தோட்ட நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளதுடன், இந்தச் சம்பவம் குறித்து பொலிஸ் கடுமையான நடவடிக்கை எடுக்காத பட்சத்தில், பசறையில் போராட்டம் வெடிக்கும் என எச்சரித்துள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் (09) மின்சாரம் தாக்கி உயிரிழந்த தொழிலாளியின்





மரணத்துக்கு தோட்ட நிர்வாகமே பொறுப்பேற்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ், உயிரிழந்த தோட்டத் தொழிலாளியின் குடும்பத்துக்கு நியாயம் கிடைக்கப் பெற வேண்டும் என்றார்.

இத்தகைய அசமந்த நிலைமை தொடர்ந்து நடைபெறாமல் இருக்க, பெருந்தோட்ட அமைச்சின் கீழ் இயங்குகின்ற பெருந்தோட்ட முகாமைத்துவ கண்காணிப்பு பிரிவு, தோட்ட நிர்வாகங்களின் செயற்பாடுகள் தொடர்பில் கண்காணிப்பு செய்தல் வேண்டும் என்றார்.

இச்சம்பவம் தொடர்பில், பொலிஸார் பக்கச்சார்பற்ற விசாரணையை மேற்கொண்டு, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பாவி தொழிலாளியின் மரணத்திற்கு நியாயம் கிடைக்கும்வரை போராட்டம் தொடரும் என்றும் தெரிவித்துள்ளார்.

பசறை, கனவரல்ல தோட்டத்தில் E.G.K பிரிவில் தோட்ட தொழிற்சாலையில் தொழில் புரியும் 24 வயதுடைய கணேசமூர்த்தி என்ற இளைஞர், தோட்ட அதிகாரியின் வீட்டில் நீர் குழாய் திருத்துவதற்காக சென்ற வேளை மின்சாரம் தாக்கி பரிதாபமாக உயிரிழந்தார்.

### அமனாவல வைத்தியசாலை தொடர்பில்

## சப்ரகமுவ மாகாண ஆளுநர் அக்கறை

■ என்.ஆராச்சி

யட்டியாந்தோட்டை தேர்தல் தொகுதியில் மிகவும் பின்தங்கிய அமனாவல கிராமிய வைத்தியசாலைக்கு, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ திடீர் விஜயம் மேற்கொண்டார்.

தற்போது குறித்த வைத்தியசாலையில் இரண்டு வைத்தியர்களும் தாதி ஒருவரும், பணியாளர் அலுவலகத்தில் நால்வரும் கடமையாற்றுகின்றனர்.

ஒரே நேரத்தில் 10 நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் இந்த வைத்தியசாலையில் காணப்பட்டாலும் வைத்தியர்களுக்கான



உத்தியோகபூர்வ வீடுகள் சேதமடைந்து காணப்படுகின்றன.

இந்தநிலையில் வைத்தியசாலைக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பகடுவ, வைத்தியரின் உத்தியோகபூர்வ வீட்டை விரைவாக புனரமைத்து, வைத்தியரை நிரந்தரமாக குறித்த வைத்தியசாலையில் 24 மணிநேரம் சேவையில் இணைப்பதற்கும் தாதியர் இருவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு மேலும் இருவரை நியமிக்குமாறும் கேகாலை மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

### 96/97ஆம் ஆண்டுகளில்

## ஆசிரிய நியமனம் பெற்றவர்களின் வெள்ளிவிழா பூர்த்தி

■ எம்.கிருஸ்ணா

1996 - 1997ஆம் ஆண்டுகளில் நியமனம் பெற்ற ஆசிரியர்களின் 25ஆம் ஆண்டு பூர்த்தி வெள்ளி விழா நிகழ்வு, ஹட்டன்- சாரதா மஹால் மண்டபத்தில் நேற்று முன்தினம் (09) நடைபெற்றது.

இந்நிகழ்வில், எஸ். முரளிதரன் (கல்விப் பணிப்பாளர், பெருந்தோட்டப் பாடசாலைகள் அபிவிருத்திப்பிரிவு) பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், ஹட்டன் வலயக் கல்விப்பணிப்பாளர் ஏ.ஆர். சத்தியேந்திரா சிறப்பு அதிதியாகவும் மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் பி.ஸ்ரீதரன் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டார்.

மலையக பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கென வழங்கப்பட்ட ஆசிரிய நியமனங்களில் 96/97 ஆண்டுகளில் வழங்கப்பட்ட இந்நியமனம் முக்கியமானதொன்று என்பதை மலையகக் கல்வி வளர்ச்சியில் இவர்களது பங்களிப்பு குறித்த தரவுகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பல்வேறு பாடத்துறைகளுக்கும் நியமனம் பெற்ற இவர்கள் ஊடாக பெருந்தோட்டப் பாடசாலைகள் புதிய வீச்சோடு பயணித்து பரீட்சைப் பெறுபேறுகளிலும் கல்வி அடைவுகளிலும் அசைவியக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

குறிப்பாக இந்த நியமனதாரிகளில் பலர் தமது தகைமைகளோடு, ஆற்றல், அனுபவம், ஆளுமை



என்பவற்றால் பதவி உயர்வு பெற்று, கல்விப்பணி ஆற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அதிபர்களாக, ஆசிரிய ஆலோசகர்களாக, உதவி கல்விப் பணிப்பாளர்களாக, கோட்ட கல்விப்பணிப்பாளர்களாக, ஆசிரிய ஆலோசகர்களாக, விரிவுரையாளர்களாக என பல்வேறு பதவி நிலைகளில் பணியாற்றி வருகின்றமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.





## சர்வமத கூட்டம்

தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன், பதுளை மாவட்ட சர்வமத குழுக்கூட்டம் பதுளை ரிவசைட் கிரேண்ட் விடுதியில் நேற்று (10) நடைபெற்றது.

(எம். செல்வராஜா)






சிங்கப்பூர் நாட்டின் மகா இளைஞர் பௌத்த சங்கத்தால் இலங்கைக்கு இரண்டு பில்லியன் ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொருட்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளதாக கலாநிதி கரதெட்டியன குணரதன தேரர் தெரிவித்தார்.

கேகாலை மாவட்ட பிரவெனா பாடசாலைகளுக்கு தேவையான உபகரணப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கேகாலை மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி நிவாரணப் பொருட்கள், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் கையளிக்கப்பட்டன. (சிவாணி ஸ்ரீ)





## விஜய தசமி விழா

இரத்தினபுரி இந்து ஸ்வயம் சேவக சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விஜய தசமி விழா, காவத்தை கெட்டியாதென்ன சிவாநந்தா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் (09) நடைபெற்றது.

காவத்தை, யாயின்ன சந்தியில் இருந்து ஆரம்பமாகிய ஊர்வலம், கெட்டியாதென்ன சிவாநந்தா வித்தியாலயத்தை சென்றடைந்ததைத் தொடர்ந்து, விஜய தசமி விழா இடம்பெற்றது.

இந்நிகழ்வில், இரத்தினபுரி மாவட்ட இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் உறுப்பினர்கள், வர்த்தகர்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். (சிவாணி ஸ்ரீ)











இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளை ஊடாக, சேவா அமெரிக்கா நிதியுதவியுடன் தலவாக்கலைப் பிரதேசத்தில் பெண் தலைமைத்துவம் ஏற்று நடத்தும் தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

(பி. கேதீஸ்)



## இரண்டு வெற்றிகள்

2022 ஆம் ஆண்டின் அகில இலங்கை தமிழ் மொழி தினபோட்டியில், மாகாண மட்டத்தில் 4ஆம் பிரிவு கவிதையாக்க போட்டியில், ஹட்டன் கல்வி வலயம் கங்கேவத்த தமிழ் வித்தியாலய மாணவன் பி. அருள்ராஜ் இரண்டாம் இடத்தைப்பெற்று, பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதுடன், 15 கல்வி வலயங்களுக்கு இடையிலான பிரிவு 04 கட்டுரை ஆக்கப்போட்டியில் ஹட்டன் டங்கல் தமிழ் வித்தியாலய மாணவி ரா. கௌசல்யா மூன்றாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

(எம். கிருஸ்ணா)



# போராட்டங்களை பொலிஸார் எள்ளிநகையாடி விடக்கூடாது

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டு, இப்படியோர் அரசாங்கம் ஆட்சிப்பீடத்தில் இருக்கிறது என்றால், போராட்டக்காரர்களே மிகமுக்கியமான காரணகர்த்தாக்கள் என்பதை அரசாங்கமும் அதிகார தரப்பினரும் மறந்துவிடக்கூடாது.

'கோட்டா கோ ஹோம்' என்ற தொனிப்பொருளிலான போராட்டத்தின் ஆக்ரோஷத்துக்கு ஈடுகொடுக்கமுடியாத முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டைவிட்டு தப்பியோடியதன் பின்னர், ஏற்பட்ட அரசியல் நெருக்கடியின்பால் இவ்வரசாங்கம் ஆட்சிப்பீடத்தில் இருக்கிறது. அந்தளவுக்கு போராட்டம் பல தளங்களில் வலுப்பெற்றிருந்தது.

அந்த 'அரகலய'வில் பங்கேற்றிருந்த பலரும் சட்டத்துக்கு அப்பால் சென்று, அரச, பொதுச் சொத்துகளுக்கு சேதங்களை விளைவித்தமையால், இன்னும் தேடித்தேடி கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றங்களின் ஊடாக விளக்கமறியலில் வைக்கப்படுகின்றனர். ஆனால், போராட்டம் முடிவுறவில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

அரசாங்கத்துக்கு எதிரான மற்றும் உரிமையைக் கோரி முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் பங்கேற்று, உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்து, காலிமுகத்திடலில், நேற்றுமுன்தினம் (09) நடத்தப்பட்ட போராட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு எதிராக, பொலிஸார் கண்மூடித்தனமாக நடந்துகொண்டமை கண்டிக்கத்தக்கது.

தென்னிலங்கையை பொறுத்தவரையில், நினைவுகூர்ந்தவர்கள் மீது அரங்கேற்றப்பட்ட இந்த அராஜகம் முதலாவது முறையாக இருக்கலாம். வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில் நினைவுகூரும் போதெல்லாம், பொலிஸார், படையினரால் மிகவும் அப்பட்டமான முறையில் அராஜகம் அரங்கேற்றப்படுகின்றது. எனினும், நினைவுகூரலும், நினைவேந்தலும், போராட்டமும் ஓயவே இல்லை.

போராட்டக்களத்துக்கு சிறுவர்களையும் குழந்தைகளையும் அழைத்துவரக்கூடாது. ஆனால், காலிமுகத்திடலில் ஞாயிற்றுக்கிழமை (09) நினைவுகூர வந்தவர்கள் அனைவரும் தங்களுடைய பிள்ளைகள், குழந்தைகளுடன் வரவில்லை. நினைவு கூரவேண்டுமென்ற உணர்வாளர்களே! பிள்ளைகளை பாதுகாப்பாக விட்டுவிட்டு வரமுடியாமல் அழைத்துவந்துள்ளனர்.

அந்தப் பிள்ளைகளை பெற்றோரிடமிருந்து பறித்தெடுத்து, அபகரிப்பதற்கான முயற்சி, மனித உரிமைகள் மீறலாகும் என்பதை பொலிஸார் விளங்கிக்கொண்டிருக்க வேண்டும். அதுமட்டுமன்றி, பங்கேற்றிருந்த பெண்களுடன் ஆண் பொலிஸார் முட்டிமோதி, கைகளை பிடித்து இழுத்தெடுக்க முயற்சித்தமையும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.

போராட்டத்தையும் அதில் பங்கேற்றிருந்தவர்களையும் சிரிப்புக்கு உரிய விடயமாக பொலிஸார் நினைத்துவிடக்கூடாது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி, அதேமக்களின் போராட்டத்தால் பதவியில் இருந்து இறக்கப்பட்டார் என்பதை நினைவில் வைத்திருக்கவே வேண்டும்.

எத்தரப்பாக இருந்தாலும் மக்கள் போராட்டத்தை எள்ளி நகையாடிவிடக் கூடாது. போராட்டங்களில் இருந்து கற்றுக்கொண்டவற்றை ஒரு பாடமாகக் கொள்ளவேண்டும். இல்லையேல், அடுத்தடுத்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதை தவிர்க்கவே முடியாது.

அதேபோல், போராட்டத்தில் ஈடுபடுகின்ற பலரும் சட்டத்தை மதித்து செயற்படுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் ஒருசிலர் அவற்றை மீறிவிடுகின்றனர். ஆகையால் சட்டத்தை மீறாமல் இருப்பதே, போராட்டத்துக்கு கிடைக்கும் வெற்றியாகும் என்பதையும் போராட்டக்காரர்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

தெரிந்தோ, தெரியாமலோ மக்கள் தவறான வாழ்க்கையை தங்கள் வசப்படுத்தி விடுகின்றார்கள். இதுபற்றி ஒருவரும் கவலைப்படுவதில்லை.

குடிகாரன் தன்னிலை இழந்து தெருவில் கிடக்கிறான். அப்போது, ஒருவன் அவனுக்குப் புத்திமதி சொன்னால், என்ன நடக்கும்? சிலசமயம் கெட்ட வார்த்தைகளைப் பேசுவான். அறிவு, பலம் அற்ற நிலையிலும் வீரன் போல் பேசுவார்கள்.

இத்தகையவர்களின் வாழ்க்கையில் ஒளியூட்டுவது எப்படி? பொதுநிறுவனங்கள், ஆன்மிக அமைப்புகள், வணக்கஸ்தல பெரியார்கள் மூலம், வழிப்படுத்த முயல வேண்டும்.

மது அருந்தினால், தன்னிலையை மனிதன் இழக்கிறான். மதுப் பழக்கத்தை கைவிட்டாலே போதும், சமூகம் சீராகும். மதுப்பழக்கம் சகல தரப்பினரையும் உருமாற்றம் செய்துவிடுகின்றது.

சேரி வாழ்க்கை, வீடுவாசல் இல்லாத தெருவோர வாழ்க்கை போன்ற நிலையில் வாழ்வோரின் அவல நிலையைச் சீராக்க, அரசுகளுடன், பொது அமைப்புகளுடன் வசதிபடைத்தோருடன் கலந்துரையாடி, உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது அவசியம். யாவரும் சீராக வாழவேண்டும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# முஸ்லிம் அரசியல் விதிவிலக்கா?

மொஹமட் பாதுஷா

இலங்கையில் யுத்தம் முடிவடைந்ததில் இருந்து, நிலைமாறுகால நீதி பற்றியும் பொறுப்புக்கூறல் பற்றியுமே தொடர்ச்சியாக பேசப்பட்டு வருகின்றது.

ஓர் ஆயுதப் போர் ஏற்பட்டமைக்கான அடிவேர்களைக் கண்டறிவதற்கும், யுத்தத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கும் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவத்தை விட, இப்பேர்ப்பட்ட மீறல்களுக்கான பொறுப்புக்கூறல் என்ற விடயத்துக்கு, அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதைக் காண முடிகின்றது.

இலங்கையின் விவகாரத்தில், பொறுப்புக்கூறல் செய்ய வேண்டியது அரசாங்கம் மட்டுமல்ல; விடுதலைப் புலிகள் மற்றும் ஏனைய ஆயுதக் குழுக்கள், சர்வதேச சமூகம் மற்றும் தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினரும் ஏதோ ஒரு வகையில் பொறுப்புக்கூற வேண்டியவர்களே என்பதை குறிப்பிட்டாக வேண்டும். தமிழ் அரசியல்வாதிகளும் இதற்கு விதிவிலக்காக இருக்க முடியாது.

அதேபோல், பொறுப்புக்கூறல் என்பது, யுத்தத்தோடு மட்டுமே தொடர்புபட்ட ஒரு விடயமும் அல்ல; ஆட்சியாளர்கள் முதற்கொண்டு, அரசியல்வாதிகள் தொட்டு, சாதாரண மக்கள் வரைக்கும் எல்லா விடயங்களிலும் எல்லாத் தரப்பினருக்கும், சிறியதும் பெரியதுமாக இந்தக் கடப்பாடு இருக்கவே செய்கின்றது.

அந்த வகையில், முஸ்லிம் அரசியல்வாதிகளும் இதற்கு விதிவிலக்கல்லர்; ஆனால், முஸ்லிம் அரசியல் எந்தளவுக்கு பொறுப்புக்கூறலின் அடிப்படையில் செயற்படுகின்றது என்ற கேள்வி எழுகின்றது.

முஸ்லிம் தனித்துவ அடையாள அரசியலும் சரி, இணக்க அரசியலும் சரி மக்களை மறந்த அரசியல் முன்னெடுப்பாகவே உருமாற்றப்பட்டு இருக்கின்றன. இதனால் முஸ்லிம் அரசியலைப் போலவே, இச்சமூகத்தின் பிரச்சினைகளும் இன்னும் சிக்கல் நிறைந்ததாக மாறியிருக்கின்றன.

முஸ்லிம் சமூகத்தின் நீண்டகாலப் பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படவில்லை. அதற்காக தொடர்ச்சியாக குரல் கொடுப்பதற்கும் போராடுவதற்குமான தமது பொறுப்பை கடந்தகால, தற்கால முஸ்லிம் தலைவர்கள், எம்.பிக்கள் மேற்கொள்ளவில்லை என்பது கண்கூடு.

ஆனாலும், அவர்கள் யாரும், இதுவரை பொறுப்புக் கூறலைச் செய்ததாக இல்லை. முஸ்லிம் சமூகம் அதனை வலியுறுத்தவும் இல்லை.

ஏதோ பொறுப்புக்கூறல் என்பது, அரசாங்கத்துக்கு மட்டுமே உரித்தானது என்பது போலவும் முஸ்லிம் அரசியல்வாதிகள் அதற்கு விதிவிலக்கு என்பது போலவுமே நடத்தைக் கோலங்கள் அமைந்துள்ளன.

முதலில், பொறுப்புக்கூறல் (Accountability) என்ற சொல்லின் ஆழ அகலங்களை விளங்கிக் கொள்வது அவசியமானது. தம்மீதுள்ள சட்டப்படியானதும் தார்மீக அடிப்படையிலானதுமான பொறுப்புகளை உணர்ந்து செயற்படுகின்ற ஒருவராலேயே, பொறுப்புக்கூறலை இலகுவாக மேற்கொள்ள முடியும்.

ஒரு நிறுவனத்தின் ஊழியருக்கு கொடுக்கப்பட்டுள்ள பணியைச் செய்வது, அவருடைய பொறுப்பு என்றால், அதில் ஏற்படும் நல்லவை - கெட்டவை, முக்கியமாக தவறுகளுக்கான விளக்கத்தை, அவர் அளிக்க வேண்டும் என்பதே, பொறுப்புக்கூறல் எனச் சுருக்கமாக விளக்கலாம்.

இந்தச் செயன்முறை, பின்னாலிருந்து முன்னோக்கிச் செயற்படுகின்றது எனலாம். அதாவது, பொறுப்புக்கூறல் பற்றிய பயம்தான், பொறுப்பை சரியாக நிறைவேற்ற வேண்டும் என்ற உணர்வை, ஒவ்வொரு மனிதனிடத்திலும் ஏற்படுத்துகின்றது.

இந்த விடயத்தில், முஸ்லிம் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளனர். தங்களது அரசியல் நகர்வுகளால் சமூகத்துக்கு ஏற்பட்ட பாதிப்புகள், தமது போக்கின் நிமித்தம் முஸ்லிம்களால் வென்றெடுக்க முடியாமல் போன உரிமைகள், அபிலாஷைகள் பற்றி எல்லாம் இவர்கள் இதுகாலவரை பொறுப்புக்கூறலைச் செய்யவில்லை.

மக்கள் மன்றத்தில், பொறுப்புக்கூறலைச் செய்ய வேண்டும் என்ற பயம் இல்லாமல் போனதன் காரணமாகவே, அவர்கள் தம்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புகளை சரிவர நிறைவேற்றாமல், தொடர்ச்சியாக கவனயீனமாக செயற்பட்டு வருகின்றார்கள்.

நாடு தழுவிய ரீதியில் வாழ்கின்ற முஸ்லிம்களின் பொதுவான பிரச்சினைகள், அபிலாஷைகள் இருக்கின்றன. இன்னும் ஆழமாக நோக்கினால், வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களின் பிரச்சினைகளும் தெற்கில் வாழ்கின்ற முஸ்லிம்களின் விவகாரங்களும் அதேபோல், மலையக முஸ்லிம்களின் விவகாரங்களும் தனித்தனிப் பண்புகளைக் கொண்டவை.

யுத்தத்தோடும், இனப்பிரச்சினைத் தீர்வு என்ற விடயத்தோடும் தொடர்புபட்ட நிலப்பரப்பில் வாழ்கின்ற மக்கள் என்ற வகையில் வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் அபிலாஷைகள் சற்றுத் தனித்துவமானவை. அதற்காகவே, தனித்துவ அடையாள அரசியலும் ஆரம்பிக்கப்பட்டது.

அதாவது, பிரச்சினைகள் எல்லோருக்கும் பொதுவானவை என்றால், பிரத்தியேக முஸ்லிம் கட்சியொன்றை உருவாக்கும் தேவைப்பாடு, மறைந்த தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப் போன்றோருக்கு ஏற்பட்டிருக்காது.

ஆனால், தனித்துவ அடையாள அரசியலின் வழிவந்த அரசியல்வாதிகள், அதனால் பதவிகளை சுவைத்து, செல்வத்தையும் குவித்ததைத் தாண்டி, முஸ்லிம் சமூகத்தின் எத்தனை பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திருக்கின்றார்கள்?

தனித்துவ அடையாள அரசியலின் பண்புகளை சற்று மாற்றிக் கொண்டு, இணக்க அரசியலுக்குள் சங்கமித்த முஸ்லிம் தலைவர்கள், தளபதிகள் கடந்த இருபது வருடங்களில் சமூகத்தின் எந்த அபிலாஷையை வென்று கொடுத்திருக்கின்றார்கள்?

கட்சித் தலைவர்கள், தேசிய தலைவர்கள் ஆனார்கள். எம்.பிக்கள் பிராந்திய தலைவர்கள் ஆனார்கள். அமைச்சராக, பிரதி அமைச்சராக பதவிகளைச் சுகித்தார்கள். நேர்வழியிலும் குறுக்குவழியிலும் உழைத்தார்கள். 'டீல்'களைப் பேசினார்கள்; தாங்கள் வளர்ந்தார்கள்; தங்களது சொந்தப் பிரச்சினைகளைத் தீர்த்தார்கள்.

மாறாக, முஸ்லிம் சமூகத்தின் எந்தப் பிரச்சினையை தீர்த்து வைத்துள்ளார்கள்? முஸ்லிம் மக்களுக்கு இவர்களால் கிடைத்த பலன்தான் என்ன? குறைந்தபட்சம் இதற்கான பொறுப்புக்கூறலையாவது செய்தார்களா?

முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகள், இனவாத நெருக்கடிகள், ஆயுதப் போராட்டத்தால் ஏற்பட்ட இழப்புகள், மனித உரிமைகள் மீறல்கள், வடக்கு - கிழக்கை மையமாகக் கொண்ட தீர்வுப் பொதி எனத் தொடரும் ஆயிரத்தெட்டு விவகாரங்களில் ஒன்றிரண்டைத்தானும் முஸ்லிம் அரசியல்வாதிகள் சரிவரக் கையாளவில்லை.

இலங்கையில் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில், மீறல்கள் இடம்பெற்றன என்பது பொதுவாகப் பேசப்படுகின்ற விடயமாகும். அரச படையினர் மட்டுமன்றி விடுதலைப் புலிகளும் மீறல்களில் ஈடுபட்டனர். இதற்கெல்லாம், ஒருநாள் பதில் கூற வேண்டும் அல்லது பொறுப்புக்கூற வேண்டும் என்ற எண்ணம் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு இல்லாதிருப்பதும் இந்த அவலங்களுக்கு முக்கிய காரணம் எனலாம்.

இதேகோணத்தில் நோக்கினால், முஸ்லிம் தலைவர்களும் முன்னாள், இந்நாள் எம்.பிகளும் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் எதையும் தீர்க்காமல், நிலைமைகளை இன்னும் சிக்கலாக்கி வைத்திருக்கின்றார்கள். அதற்கு அடிப்படைக் காரணம், பொறுப்புக்கூறல் பற்றிய அச்சமின்மையே ஆகும்.

'இந்தப் பிரச்சினையை தீர்க்காவிட்டால், வாக்களித்த மக்கள் கேட்பார்கள்; பல்கலைக்கழக சமூகம் கேள்வி எழுப்பும்; புத்திஜீவிகள் குரல் கொடுப்பார்கள்; புலம்பெயர்ந்த முஸ்லிம்கள் அழுத்தம் பிரயோகிப்பார்கள்; ஜம்மியத்துல் உலமா சபையும் பள்ளிவாசல்களும் சிவில் சமூகமும் கேள்வி எழுப்பும்' என்ற முன்னுணர்வு இருந்திருந்தால், முஸ்லிம் அரசியல்வாதிகள் இந்தளவுக்கு தான்தோன்றித்தனமாக, பொறுப்பற்றுச் செயற்பட்டிருக்க மாட்டார்கள்.

முஸ்லிம்கள் ஒரு சமூகமாக, நடுச் சந்தியில் வைத்து கேள்வி எழுப்புவார்கள். அதற்கு ஒரு நாள் நாம் பதிலளிக்க வேண்டி வரும்; பொறுப்புக்கூறாமல் தப்பிக்க முடியாத இக்கட்டான நிலை ஏற்படும் என்று அரசியல்வாதிகள் கருதியிருந்தால், சற்றுக் கவனமாக அவர்கள் செயற்பட்டிருப்பார்கள்.

தம்மைக் கேள்வி கேட்பதற்கும் தட்டிக் கேட்பதற்கும், யாரும் இல்லை என்ற தைரியம் முஸ்லிம் அரசியல்வாதிகளை, சமூகத்தை மறந்த பாதையில் பயணிக்கச் செய்துள்ளது. பொறுப்பின்றியும் பொறுப்புக்கூறல் இன்றியும் செயற்பட்டு விட்டு, பிறகு வந்து ஏதாவது பொய்யைக் கூறி ஏமாற்றலாம் என்ற துணிவு அவர்களிடத்தில் உரம்பெற்றுள்ளது.

ஆக மொத்தத்தில், முஸ்லிம் கட்சித் தலைவர்கள் மட்டுமன்றி எல்லாக் கட்சிகளையும் பிரதிநிதித்துவம் செய்கின்ற முஸ்லிம் எம்.பிக்களும் சமூகம் பற்றிச் சிந்திக்காமல் சுயநலமிகளாக இருப்பதற்கு இதுவே அடிப்படைக் காரணமாகும். இதற்கு ஒரு வகையில் சமூகமும் காரணமாகியுள்ளது.

முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் ஒவ்வொருவரும், தமது பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும். அந்தப் பொறுப்பை எவ்வாறு நிறைவேற்றினீர்கள் அல்லது நிறைவேற்றாமல் விட்டீர்கள் என்பதற்கு பொறுப்புக்கூற வேண்டும்.

கடந்த காலங்களில் விட்ட அரசியல் தவறுகள் பற்றிய ஒட்டுமொத்தமான பொறுப்புக்கூறலுக்கான அழுத்தத்தை, முஸ்லிம் சமூகம் பிரயோகிக்க வேண்டும். அதற்கான ஒரு கட்டமைப்பை, முஸ்லிம் சமூகத்துக்குள் உருவாக்கப்படுவது அவசியமாகும்.

கடந்த காலத்தில் விட்ட அரசியல் தவறுகளை, தொடர்ந்தும் செய்யாமல் இருப்பதற்கும், அதைத் திருத்திக் கொள்வதற்கும் இது வழிவகுக்கும். அதுமட்டுமன்றி, என்றாவது ஒருநாள் பொதுத் தளத்தில் பொறுப்புக்கூறல் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்ற முன்னுணர்வு, அவர்கள் கொஞ்சமேனும் பொறுப்புகளை சரியாக நிறைவேற்ற வழிகோல வாய்ப்புள்ளது.

இந்தப் பொறுப்பை, முஸ்லிம் சிவில் சமூகமும் அரசியல்வாதிகளும் சரிவர நிறைவேற்றவில்லை என்றால், இன்னும் இருநூறு வருடங்கள் போனாலும் முஸ்லிம் எம்.பிக்களின் அரசியலானது, முஸ்லிம் சமூகத்துக்கான அரசியலாக உருமாறுவதற்கான எந்த வாய்ப்பும் இல்லை.

## கடிதங்கள்

### இருளில் மூழ்கும் மத்தியமுகாம்

பல்லின சமூகங்கள் ஒன்றித்து வாழும் அம்பாறை மாவட்டம், நாவிதன்வெளி பிரதேச சபைக்கு உட்பட்ட மத்தியமுகாம் பிரதேசம், இரவு நேரங்களில் இருளில் மூழ்கியுள்ளதாகவும், அதனால் பல்வேறு சீர்கேடுகள், விபத்துகள் இடம்பெறுவதாகவும் இது தொடர்பில் பிரதேச சபைக்கு பலமுறை அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இழுத்தடிப்பு செய்து வருவதாகவும், பாதிக்கப்படும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நாவிதன்வெளி நகர் இருளில் இருக்கின்றது. குறித்த நகரில் கோவில், ஜும்மாப் பள்ளிவாசல், பௌத்த விகாரை, வங்கிகள், பொலிஸ் நிலையம், வர்த்தக நிலையங்கள், குடியிருப்பு வீடுகள் என மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதியாக இருக்கும் நிலையில், நகரம் இருளில் மூழ்கியுள்ளதால் அச்சநிலை காணப்படுகின்றது.

இந்தப் பிரதேசத்தின் நிலை தொடர்பில், நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர், பிரதேச சபை செயலாளர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பலருக்கும் மக்கள் நேரடியாக தெரிவித்தும், உப தவிசாளர் உட்பட மக்கள் பிரதிநிதிகள் பலரும் சபையில் இது தொடர்பில் கேள்வி எழுப்பியும் வேண்டுமென்றே பாராமுகமாக இருப்பதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது விடயமாக, உடனடியாக நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் என, மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

நூருல் ஹுதா உமர்



பெங்களூர்

# இந்திய வம்சாவளியினருக்கு வேலை கிடையாது?

பன்னாட்டுத் தொழில் நுட்ப நிறுவனமான இன்போசிஸ் நிறுவனம் பெங்களூரைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

உலகம் முழுவதும் பல இடங்களில் இன்போசிஸ் நிறுவனத்தில் ஏராளமான ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் இந்நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு பிரிவின் முன்னாள் தலைவர் ஜில் ப்ரீஜின், தற்போது அமெரிக்காவின் நியூயோர்க் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்துள்ளார்.

அதில், இன்போசிஸ் நிறுவனம் பாலினம் மற்றும் தேசியம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டியதாகவும், ஆட்சேர்ப்பின்போது இந்திய வம்சாவளியினர், குழந்தை பெற்ற பெண்கள் மற்றும் 50 வயதிற்கும் மேற்பட்டவர்கள் திட்டமாக பணி வாய்ப்பு வழங்கப்படாமல் நீக்கப்பட்டதாகவும் புகார் தெரிவித்துள்ளார்.

இவ்வழக்கில் போதிய ஆதாரங்கள் இல்லை எனவும், இவ்வழக்கைத் தள்ளுபடி செய்யுமாறு அந்நிறுவனம் நீதிமன்றத்தில் முறையிட்ட நிலையில், அதை நிராகரித்துள்ள நீதிமன்றம், இன்னும் 21 நாள்களுக்குள் விளக்கம் அளிக்க வேண்டும், என அந்நிறுவனத்துக்கு உத்தரவிட்டுள்ளது.



உத்தர பிரதேசம்

# முன்னாள் முதலமைச்சர் காலமானார்

உத்தர பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சர் முலாயம் சிங் யாதவ் உடல்நலக் குறைவு காரணமாக நேற்று (10) காலமானார்.

உத்தர பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சர் மற்றும் சமாஜ்வாடி கட்சியின் தலைவரான முலாயம் சிங் யாதவுக்கு, கடந்த சில நாள்களுக்கு முன்னர் திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது. குறிப்பாக, அவருக்கு சுவாசிப்பதில் சிக்கல் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, அவர் அரியானாவின் குருகிராம் நகரில் உள்ள மேதந்தா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதனை அவரது மகன் மற்றும் சமாஜ்வாடி கட்சி தலைவரான அகிலேஷ் யாதவ், தனது டுவிட்டரில் உறுதி செய்துள்ளார்.



சிதம்பரம்

# மாணவிக்குத் தாலி கட்டிய மாணவன்

12 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவிக்கு, மாணவன் தாலி கட்டிய சம்பவம் சிதம்பரம், கடலூர் மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

கடலூர் பஸ் நிலையம் அருகே உள்ள நிழற்குடையில், பாடசாலை சீருடையில் இருக்கும் மாணவிக்கு மாணவன் தாலி கட்டியுள்ளார்.

இதனை உடன் இருந்த மாணவன் வீடியோ எடுத்துள்ளான். குறித்த வீடியோவில் மாணவன் மாணவிக்குத் தாலி கட்டுவதும், பூவுக்குப் பதிலாக காகிதங்களை கிழித்து நண்பர்கள் வீசுவதும் பதிவாகியுள்ளது.

> **பஸ் நிழற்குடையில், பாடசாலை சீருடையில் இருக்கும் மாணவிக்கு மாணவன் தாலி கட்டியுள்ளார். இதனை உடன் இருந்த மாணவன் வீடியோ எடுத்துள்ளான்.பூவுக்குப் பதிலாக காகிதங்களை கிழித்து நண்பர்கள் வீசுவதும் பதிவாகியுள்ளது**

இந்நிலையில் குறித்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வரும் நிலையில், இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதால் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்படும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சென்னை

# வேதனையில் முதலமைச்சர் ஸ்டாலின்



சென்னையில் நேற்றுமுன்தினம் (09) நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக பொதுக்குழு கூட்டத்தில், முதலமைச்சர் மு.க ஸ்டாலின் தி.மு.கவின் தலைவராக 2ஆவது முறையாகவும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இப் பொதுக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், கட்சிக்காரர்கள் ஏற்படுத்தும் பிரச்சினை குறித்து வேதனையுடன் பேசியிருந்தார்.

இதன்போது, “அதிக மழை பெய்தாலும், மழை பெய்யாவிட்டாலும் என்னைத்தான் குறை சொல்வார்கள். பலமுனைத் தாக்குதல்களுக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டவன் நான். ஒரு பக்கம் தி.மு.க தலைவர்; மறு பக்கம் தமிழ்நாட்டின் முதலமைச்சர். மத்தளத்துக்கு இரண்டும் பக்கம் அடி என்பது போல் உள்ளது எனது நிலைமை.

உண்மையில் நாள்தோறும் நம்மவர்கள் யாரும் பிரச்சினையை உருவாக்கியிருக்கக் கூடாது என்று தான் கண்விழிக்கிறேன். இது சில நேரங்களில் என்னை தூங்க விடாமல் கூட ஆக்குகின்றது. என் உடலைப் பார்த்தாலே உங்களுக்கு தெரியும். உங்களின் ஒவ்வொரு நிமிடமும் கண்காணிக்கப்படுகிறது. மிக மிக எச்சரிக்கையாகப் பேசுங்கள். நீங்கள் சொன்னத்தை வெட்டி, ஒட்டி பரப்புவார்கள். இது தான் எதிரிகளின் நோக்கம். இது முக்கியமான கால கட்டம். நாடாளுமன்ற தேர்தல் நெருங்கி கொண்டுள்ளது. யாரும் மெத்தனமாக இருக்க கூடாது” எனத் தெரிவித்துள்ளார்.

> **உங்களின் ஒவ்வொரு நிமிடமும் கண்காணிக்கப்படுகிறது. மிக மிக எச்சரிக்கையாகப் பேசுங்கள். நீங்கள் சொன்னத்தை வெட்டி, ஓட்டி பரப்புவார்கள். இது தான் எதிரிகளின் நோக்கம். இது முக்கியமான கால கட்டம். நாடாளுமன்ற தேர்தல் நெருங்கி கொண்டுள்ளது. யாரும் மெத்தனமாக இருக்க கூடாது**



உத்தர பிரதேசம்

# காதலனுடன் சேர்ந்து தந்தையை கொன்ற மகள்

உத்தர பிரதேசத்தின் மிர்சாபூர் நகரைச் சேர்ந்தவர் சந்தோஷ் குமார். இவர் தனது மகளான சுமன் என்பவருக்குத் திருமணம் செய்து வைக்க வரன் தேடிவந்த நிலையில் சில நாள்களுக்கு முன்னர் காணாமற்போயுள்ளார்.

இதனால் அவரது குடும்பத்தினர் இது குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். இதுபற்றி தீவிர விசாரணை நடத்திய பொலிஸார், சந்தேகத்தின்பேரில், அக்கிராமத்தில் வசித்து வந்த ரவீந்திர குமார் (வயது 40) என்பவரை விசாரித்துள்ளனர்.

இதன்போது சுமன், திருமணம் ஆனவரான ரவீந்திர குமாருடன் கள்ளக்காதலில் ஈடுபட்டு வந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

அத்துடன் இதனை அறியாத சுமனின் தந்தை, தனது மகளுக்கு வரன் தேடியுள்ளார் எனவும், இதனால் ஆத்திரமடைந்த ரவீந்திர குமார் சந்தோஷை கொலை செய்ய சுமனுடன் இணைந்து திட்டமிட்டுள்ளார் எனவும் இதன்படி சந்தோஷை க் கொலை செய்துஅவரது உடலைக் கழிவு நீர் குழாய்க்குள் மறைத்து வைத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருமணமான நான்கு மாதத்தில்

# இரட்டை குழந்தைகள்

நயன்தாரா-விக்னேஷ் சிவன் தம்பதி இரட்டை குழந்தைகளுக்கு பெற்றோராகியுள்ளனர். விக்னேஷ் சிவன் இதனை தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டார்.

“நயனும் நானும் பெற்றோராகியுள்ளோம். இரட்டை ஆண் குழந்தைகளை நாங்கள் வரவேற்றுள்ளோம். எங்களது வழிபாடு, எங்கள் முன்னோர்களின் ஆசீர்வாதங்கள் அனைத்தும் இணைந்து எங்களுக்கு குழந்தைகளாக உருவெடுத்துள்ளன” என விக்னேஷ் சிவன் பதிவிட்டுள்ளார்.

இதோடு தம்பதி இரண்டு குழந்தைகளுடன் இருக்கும் புகைப்படங்களையும் அவர் பகிர்ந்துகொண்டுள்ளார்.


நயன்தாரா-விக்னேஷ் சிவன் ஜூன் மாதம் 9ஆம் திகதி மாமல்லபரத்தில் திருமணம் செய்துகொண்டனர். இந்த நிலையில் திருமணமான நான்கு மாதத்தில் வாடகை தாய் ஊடாக, இவர்கள் குழந்தை பெற்றுக்கொண்டது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# ஷாருக்கான் நெகிழ்ச்சி

சென்னையில் உள்ள ஆதித்யா ராம் ஸ்டுடியோவில் உருவாக்கப்பட்ட பிரமாண்ட செட்டில் அட்லி இயக்கத்தில் ஷாருக்கான் நடிக்கும் ‘ஜவான்’ படத்தின் படப்பிடிப்பு 30 நாள்கள் நடைபெற்று முடிந்துள்ளது. இந்நிலையில் சமூக ஊடகத்தில் அது குறித்து ஒரு பதிவு போட்டிருக்கிறார் ஷாருக்கான்.

அதில், ‘கடந்த 30 நாள்கள் என்ன ஒரு சிறப்பான அனுபவம். தலைவர் ரஜினிகாந்த் எங்கள் படப்பிடிப்பு தளத்திற்கு வந்து ஆசிர்வாதம் செய்தார். நயன்தாராவுடன் இணைந்து படம் பார்த்தேன். அனிருத்துடன் பார்ட்டி கொண்டாடினேன். விஜய் சேதுபதியுடன் நீண்ட உரையாடல். விஜய் சுவையான உணவு அளித்தார். இயக்குநர் அட்லி மற்றும் பிரியா ஆகியோரின் விருந்தோம்பலுக்கு நன்றி. தற்போது சிக்கன் 65 ரெசிபி சமைக்க கற்றுக் கொள்ள வேண்டும்’ என்று பதிவு போட்டு இருக்கிறார் ஷாருக்கான்.

இதையடுத்து அவரது பதிவுக்கு இயக்குநர் அட்லி ஒரு பதில் கொடுத்து இருக்கிறார். அதில், ‘மிக்க நன்றி சார். நீங்கள் சென்னை வந்தது குறித்து மிகவும் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சி அடைகிறேன். எனது சினிமா வாழ்க்கையில் சென்னையில் நடந்த இந்த படப்பிடிப்பு மறக்க முடியாத நிகழ்வு’ என்று பதிவிட்டுள்ளார் அட்லி.





‘எங்க ஏரியா உள்ள வராதே’..

# முதல் நாள் ஆட்டம்

விஜய் டிவியில் பிக்பாஸ் தமிழ் சீசன் 6 நிகழ்ச்சி நேற்று முன்தினம் தொடங்கியது. அறிமுக நிகழ்ச்சியில் 20 போட்டியாளர்களின் அறிமுகம் பிரமாண்டமாக நடைபெற்றது.

கடந்த ஐந்து சீசன்களையும் மிக சிறப்பாக தொகுத்து வழங்கிய உலகநாயகன் கமல்ஹாசன் 6வது சீசனையும் தொகுத்து வழங்கினார். வழக்கம் போல் அவர் இந்த நிகழ்ச்சியை பிரமாதமாக தனக்கே உரிய பாணியில் ஆரம்பித்து வைத்தார்.

பிக்பாஸ் சீசன் 6 நிகழ்ச்சியில் ஜி.பி. முத்து, அசல் கொலார், ஷிவின் கணேசன், அஸீம், ராபர்ட் மாஸ்டர், ஆயிஷா, ஷெரினா, மணிகண்டன், ராஜேஷ், ரச்சிதா மகாலெட்சுமி, ராம் ராமசாமி, ஏடிகே, ஜனனி, சாந்தி, விக்ரமன், அமுதவாணன், மகேஷ்வரி சாணக்யன், விஜே கதிரவன், குயின்சி, நிவ்வா மற்றும் தனலெட்சுமி ஆகிய 20 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில் ஒவ்வொரு நாளும் காலை போட்டியாளர்களை விழிப்பதற்காக பாடல் ஒன்று ஒலிக்கப்படும் நிலையில் நேற்றைய முதல் நாளில் ‘எங்க ஏரியா உள்ள வராதே’ என்ற பாடலை பிக்பாஸ் ஒலிக்க வைத்த நிலையில் அனைத்து போட்டியாளர்களும் வெளியே வந்து ஆட்டம் போடும் காட்சிகள் புரமோவில் வெளியாகின.


முதல் நாளில் ஒருவருக்கு ஒருவர் கைகோர்த்து கொண்டு ஒற்றுமையாக ஆட்டம் போடும் இந்தப் போட்டியாளர்கள் அடுத்தடுத்து என்ன செய்யப்போகிறார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

2020, 2021ஆம் ஆண்டுக்கான

# பிலிம் பேர் விருதுகள்

தென்னிந்திய அளவில் வழங்கப்படும் திரைப்பட விருதுகளில் பிலிம்பேர் விருதுகள் மதிப்புற்குரிய விருதுகளாகக் கருதப்படுகிறது. கடந்த 66 ஆண்டுகளாக இந்த விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. 67வது தென்னிந்திய பிலிம்பேர் விருதுகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் பெங்களூருவில் நடைபெற்றது.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளைச் சேர்ந்த கலைஞர்களுக்கு நேற்று விருதுகள் வழங்கப்பட்டது. 2020 மற்றும் 2021ஆம் வருடங்களில் வெளிவந்த படங்களை வருடம் வாரியாக தனித் தனியாகத் தேர்வு செய்யாமல், ஒன்றிணைத்து விருதுகள் வழங்கப்பட்டது. நடிகையர்களின் நடன நிகழ்ச்சிகளுடன் பல தென்னிந்தியக் கலைஞர்கள் பங்கேற்று சிறப்பிக்க விழா நடைபெற்றது.



பிலிம்பேர் விருதுகளை வென்ற கலைஞர்கள்

சிறந்த நடிகர் - சூர்யா (சூரரைப் போற்று)

சிறந்த நடிகை - லிஜோமோல் ஜோஸ் (ஜெய் பீம்)

சிறந்த திரைப்படம் - ஜெய் பீம்

சிறந்த இயக்குநர் - சுதா கோங்கரா (சூரரைப் போற்று)

சிறந்த துணை நடிகர் - பசுபதி (சார்பட்டா பரம்பரை)

சிறந்த துணை நடிகை - ஊர்வசி (சூரரைப் போற்று)

சிறந்த இசை ஆல்பம் - சூரரைப் போற்று - ஜிவி பிரகாஷ்குமார்

சிறந்த பின்னணிப் பாடகர் - கிறிஸ்டின் ஜோஸ், கோவிந்த் வசந்தா - (ஆகாசம் பாடல் - சூரரைப் போற்று)

சிறந்த பின்னணிப் பாடகி - தீ (காட்டுப் பயலே பாடல் - சூரரைப் போற்று)

சிறந்த நடனம் - தினேஷ் குமார் (வாத்தி கம்மிங் மாஸ்டர்)

சிறந்த ஒளிப்பதிவு - நிகேத் பொம்மி ரெட்டி (சூரரைப் போற்று)

ரஷ்யா

# புட்டினுக்கு உழவு இயந்திரம் வழங்கிய பெலாரஸ் ஜனாதிபதி





ரஷ்ய ஜனாதிபதி விளாதிமிர் புடின், கடந்த 7 ஆம் திகதி தனது 70ஆவது பிறந்தநாளை மொஸ்கோவில் உள்ள ஜனாதிபதி மாளிகையான கிரெம்லினில் கொண்டாடினார்.

இந்நிலையில் புட்டினுக்கு அண்டை நாடான பெலாசரஸின் ஜனாதிபதி அலெக்ஸான்டர் லுஹான்ஸ்கோ, தன்னாட்டில் தயாரிக்கப்பட்ட சிறப்பு ரக உழவு இயந்திரம் ஒன்றைப் பரிசாக வழங்கியுள்ளார்.

புட்டினின் மிக நெருங்கிய நண்பராகக் கருதப்படும் லுஹான்ஸ்கோ, 1994ஆம் ஆண்டு முதல் பெலாரஸின் ஜனாதிபதியாக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல், ரஷ்யாவின் மற்றுமொரு நட்பு நாடான தஜிகிஸ்தான் நாட்டு ஜனாதிபதி எமோமாலி ரஹ்மோனும் புட்டினுக்கு தர்பூசனி பழங்களை மலைப்போல் அடுக்கி பரிசாக வழங்கியுள்ளார்.

1952ஆம் ஆண்டு ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பெர் நகரில் பிறந்த புட்டின், 1999ஆம் ஆண்டு தனது ஆட்சியை ரஷ்யாவில் நிறுவி, தற்போது வரை சுமார் 23 ஆண்டுகள் அந்நாட்டின் அசைக்க முடியாத தலைவராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா



## கின்னஸ் சாதனை படைத்த ‘பெப்பில்ஸ்‘ மரணம்

‘உலகில் அதிக நாள்கள் உயிர் வாழ்ந்த நாய்’ என்ற கின்னஸ் சாதனையைப் படைத்த ‘பெப்பில்ஸ்’ என்ற பெண் நாய் அண்மையில், தனது 22 ஆவது வயதில் உயிரிழந்துள்ளது.

‘டோய் ஃபாக்ஸ் டெரியர்’ இனத்தைச் சேர்ந்த குறித்த நாயானது, அமெரிக்காவின் தென் கரோலினாவில் டெய்லர்ஸ் என்ற இடத்தில் அதன் உரிமையாளர்களுடன் வசித்து வந்த நிலையில், கடந்த 3 ஆம் திகதி இயற்கை மரணம் எய்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

23 வயதைத் தொடுவதற்கு வெறும் 5 நிமிடமே இருந்த நிலையில் பெப்பில்ஸ் மரணம் அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ‘பெப்பில்ஸ்‘ இதுவரை 32 குட்டிகளை ஈன்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.




ஈரான்

## அரச தொலைக்காட்சியை முடக்கிய போராட்டக்காரர்கள்

ஈரானில் ஹிஜாப்பினை முறையாக அணியாத காரணத்தால், மஹ்சா அமினி என்ற யுவதி பொலிஸாரால் கொல்லப்பட்டார்.

இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆயிரக்கணக்கானோர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அண்மையில் அந்நாட்டு அரச தொலைக்காட்சியின் நேரடி ஒளிப்பரப்பின் போது உள்ளே புகுந்த போராட்டக்காரர்கள் சில நிமிடங்கள் வரை நிகழ்ச்சிக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளதோடு, அரச தொலைக்காட்சியின் நேரடி ஒளிப்பரப்பை ‘ஹேக்’ செய்து அதில், ‘எங்களுடன் இணைந்து போராட வாருங்கள்’ என்ற வீடியோவையும் வெளியிட்டுள்ளனர். இதனால் ஈரான் அரசு கடும் அதிர்ச்சி அடைந்துள்ளது.




நைஜீரியா



## படகு கவிழ்ந்ததில் 76 பேர் உயிரிழப்பு

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில், ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 76 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

சனிக்கிழமை (08) ஆம் திகதி 85 பேருடன் ‘நைஜர் ‘ஆற்றில் பயணித்த படகே இவ்வாறு இயந்திரக் கோளாறு காரணமாக நீரில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெனிசுலா

## வெனிசுலாவில் நிலச்சரிவு; 22 பேர் உயிரிழப்பு

வெனிசுலாவில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகிறது.

இந்நிலையில், அரகுவா என்ற மத்திய மாகாணத்தின் வடக்கே பெய்த கனமழையால் நேற்று முன்தினம் (09) பாரிய நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்நிலச்சரிவில் சிக்கி 22 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 50 பேர் காணாமல் போயுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அப்பகுதியில் 1,000 க்கும் மேற்பட்டோர் மீட்புப் பணி மற்றும் நிவாரணப் பணியில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இப்பேரிடரில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவிக்கும் விதமாக நாட்டில் 3 நாள்கள் தேசிய அளவில் துக்கம் கடைப்பிடிக்கப்படும் என்றும் அந்நாட்டின் ஜனாதிபதி மதுரோ அறிவித்துள்ளார்.







இரண்டாவது போட்டியில்

# தென்னாபிரிக்காவை வீழ்த்திய இந்தியா

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இந்தியா வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், ராஞ்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்காவின் பதிலணித்தலைவர் கேஷவ் மஹராஜ், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

இப்போட்டியில் இந்தியா சார்பாக ஷபாஸ் அஹ்மட் அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, ஆரம்பத்திலேயே குயின்டன் டி கொக்கை மொஹமட் சிராஜ்ஜிடம் இழந்ததுடன், சிறிது நேரத்தில் ஜனமென் மலனை 25 (31) ஓட்டங்களுடன் அஹ்மட்டிடம் இழந்தது. பின்னர் றீஸா ஹென்ட்றிக்ஸ், ஏய்டன் மார்க்ரமின் இணைப்பாட்டத்தால் இனிங்ஸை நகர்த்திய தென்னாபிரிக்கா, 74 (76) ஓட்டங்களுடன் சிராஜ்ஜிடம் ஹென்ட்றிக்ஸை இழந்தது. பின்னர் அடுத்து வந்த ஹென்றிச் கிளாசெனை 30 (26) ஓட்டங்களுடன் குல்தீப் யாதவ்விடம், மார்க்ரமை 79 (89) ஓட்டங்ட்களுடன் வொஷிங்டன் சுந்தரிடம் அடுத்தடுத்த ஓவர்களில் இழந்தது.

இதையடுத்து வெய்ன் பார்னல், மஹராஜ் ஆகியோர் ஷர்துல் தாக்கூர், சிராஜ்ஜிடம் வீழ்ந்த நிலையில், டேவிட் மில்லரின் ஆட்டமிழக்காத 35 (34) ஓட்டங்களுடன் 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 278 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 279 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா, ஆரம்பத்திலேயே அணித்தலைவர் ஷீகர் தவான், ஷுப்மன் கில்லை பார்னல், ககிஸோ றபாடாவிடம் இழந்தது. எனினும், இஷன் கிஷன், ஷ்ரேயாஸ் ஐயரின் இணைப்பாட்டம் மூலம் வெற்றியிலக்கை நோக்கிப் பயணித்த இந்தியா, 93 (84) ஓட்டங்களுடன் கிஷனை பிஜோன் போர்டினிடம் இழந்தது. இந்நிலையில், ஷ்ரேயாஸ் ஐயரின் ஆட்டமிழக்காத 113 (111), சஞ்சு சாம்ஸனின் ஆட்டமிழக்க்காத 30 (36) ஓட்டங்களோடு 45.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கை இந்தியா அடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஐயர் தெரிவானார்.

இந்நிலையில், டெல்லியில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டி நடைபெறவுள்ளது.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## லிவர்பூலை வென்ற ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற லிவர்பூலுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது. ஆர்சனல் சார்பாக, புகாயோ ஸாகா இரண்டு கோல்களையும், கப்ரியல் மார்டினெல்லி ஒரு கோலையும் பெற்றனர். லிவர்பூல் சார்பாக, டர்வின் நுனேஸ், றொபேர்ட்டோ பெர்மினோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், எவெர்ற்றனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் வென்றது. யுனைட்டெட் சார்பாக, அந்தோனி, கிறிஸ்டியோனோ றொனால்டோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். எவெர்ற்றன் சார்பாகப் பெறப்பட்ட கோலை அலெக்ஸ் இவோபி பெற்றிருந்தார்.



கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி ஆசிரியர் தின

## சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் எம்.எஸ்.சீ.கே றொக்கெட் அணி வெற்றி

எம்.என்.எம். அப்ராஸ்

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி தேசிய பாடசாலையில் சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆண் ஆசிரியர்கள் இடையில் இடம்பெற்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் எம்.எல். சீ.கே றொக்கெட் அணி 4 விக்கெட்டுகளால் வென்றது.

எம்.எல்.சீ.கே. றொக்கெட் அணிக்கும், எம்.எல்.சீ.கே றோயல் அணிக்குமிடையிலான அணிக்கு எட்டுப் பேர் கொண்ட ஆறு ஓவர்கள் கொண்ட குறித்த போட்டியானது கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய எம்.எல். சீ.கே றோயல் அணியினர் ஆறு ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றது. நாசர் 20 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு, 70 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய எம். எல்.சீ.கே றொக்கெட் அணியினர் 6.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. துடுப்பாட்டத்தில், முஸ்தபா முபாறக் 30 ஓட்டங்களைப் பெற்றார்.

இப்போட்டியின் நாயகனாக முஸ்தபா முபாறக் தெரிவானார்.

## தேசிய மட்டத்துக்கு தெரிவான அருளினிக்கு கௌரவம்

செ. கீதாஞ்சன்

வடக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற தடகளப் போட்டியில் முல்லைத்தீவு, உடையார் கட்டு, குரவில் தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த மகாலிங்கம் அருளினி இரண்டு தங்கப்பதக்கங்களை பெற்று தேசிய போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

இம்மாணவியை கௌரவிக்கும் நிகழ்வு, குரவில் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது.



18 வயதுக்குட்பட்ட முப்பாய்ச்சல் போட்டியிலும் தடை தாண்டல் போட்டியிலும் முதல் இடங்களைப் பெற்று இரண்டு தங்கப்பதக்கங்களை பெற்றார்.

மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களை கொண்ட பிரதேசமாக குரவில் பிரதேசம் காணப்படுகின்றது. குரவில் தமிழ்வித்தியாலயத்தில் சரியான விளையாட்டு உபகரணங்கள் இல்லாத நிலையில், தடைதாண்டல் பயிற்சிக்காக கொட்டன்களை வைத்து தடைதாண்டல் பயிற்சியை மேற்கொண்டு, தங்கப் பதக்கங்களை அருளினி பெற்றுள்ளமை பாராட்டுக்குரியது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 11 ஒக்டோபர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.